நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

University of Jaffna
235.3
NAY
183622(AR: Main)

மஹோற்சவத் திருவிழா
சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமஞ்ச வெள்ளோட்டத்திற்கான பூர்வாங்க கிரிகைகள் நடைபெறல்.

பூர்வாங்க கிரிகைகளைத் தொடர்ந்து ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்
திரு கா. ஆ. தியாகராசா அவர்களால் திருமஞ்சத்திற்கான கலசம் எடுத்துக் செல்லல்.

Digitized by Thiruvarangam
noolaham.org | aavanaham.org

AR

2000A

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

உ

ஓம் சக்தி

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் திருமஞ்சத் திருவிழாச் சிறப்பு மலர்

235.3
NAY

AR

அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

ARCHIVES

University of Jaffna
183622
Library

– வெளியீடு –

மஞ்சத்திருவிழா நிர்வாக சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு

183622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183622



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் திருக்கைலைக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

மலரின் உள்ளே . . .

ஆசியுரை
சிவாகமகலாநிதி, சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள்
விஷேட குருமணி, நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

வாழ்த்துரை
கிரியா கலாப முத்தாமணி சிவஸ்ரீ சம்பு. மகேஸ்வரக் குருக்கள்
ஆதீன குருமணி, நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

பாராட்டுரை
கா. ஆ. தியாகராசா, தலைவர், அறங்காவலர் சபை
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

பாராட்டுரையும் நன்றி உரையும்
அ. சண்முகநாதன் ஜே. பி. தலைவர், மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

செயலாளரர் சிந்தனையிலிருந்து
பொ. கலைநாதன், செயலாளர், மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

நான்காம் திருவிழா மஞ்சத்திருவிழாவான வரலாறு
நயினை, நாகமணி கோபாலகிருஷ்ணன் ஜே. பி. மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

அம்பிகைக்கு உருவாகிய அழகிய திருமஞ்சம்
மு. நா. நடராசா முன்னாள் பொருளாளர், அறங்காவலர் சபை

மஞ்ச அமைப்பும் அதன் தத்துவமும்
சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள்
விஷேட குருமணி, நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

ஆலய வரலாறும் அம்பிகையின் மகத்துவமும்
நா. யோகநாதன் பீ. ஏ. நிறைவேற்று அலுவலர்
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

ஆலய வழிபாட்டின் அவசியம்
சாஹித்ய சிரோன்மணி, சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி குருக்கள்
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

திருமஞ்சத் திருப்பாடல்கள்
நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை பீ. எஸ்சீ.

மங்கல வாழ்த்துப் பாமாலை
அறங்காவலர் சபையினர்

உள்வீதி சுற்றுப்பிரகாரத் தோத்திரப் பாடல்கள்
தோத்திரப் பாக்களின் தொகுப்பிலிருந்து

அபிராமி அந்தாதி
அபிராமிப்பட்டர் திருப்பாடல்கள்

அம்பிகையின் திருஞ்சல் பாடல்கள்
ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப்புலவர்

மஞ்சத்திருப்பணி நிதிக்கு பங்களிப்பு ச் செய்தோர் பட்டியல்
மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

மஞ்சத்திருவிழா வரவு செலவு அறிக்கை
மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மாதாந்த விஷேட நிகழ்வுகள்
நிறைவேற்று அலுவலர்
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமஞ்சத்திருவிழா நிர்வாக சபை

போஷகர் :	திரு வே. நாகேஸ்வரன் அவர்கள்.
தலைவர் :	திரு அ. சண்முகநாதன் ஜே. பி. அவர்கள்.
உப. தலைவர் :	திரு பொ. திருச்செல்வம் அவர்கள்.
செயலாளர் :	திரு பொ. கலைநாதன் அவர்கள்.
உப. செயலாளர் :	திரு மு. இலட்சுமணன் அவர்கள்.
பொருளாளர் :	திரு பொ. பரமலிங்கம் அவர்கள்.
உப. பொருளாளர் :	திரு சி. க. நாகேஸ்வரன் அவர்கள்.

திருமஞ்சத்திருவிழா சிறப்பு மலர்க் குழு

திரு அ. சர்வானந்தராசா அவர்கள் கொழும்பு.
திரு த. சிவானந்தன் அவர்கள் கொழும்பு.
திரு சி. கந்தசாமி அவர்கள் கொழும்பு.
திரு த. சண்முகரெத்தினம் அவர்கள் கொழும்பு.
திரு மு. கந்தசாமி அவர்கள் கொழும்பு.
திரு தி. இரத்தினராசா அவர்கள் கொழும்பு.
திரு க. லோகநாதன் அவர்கள் கொழும்பு.
திரு வ. அருட்செல்வம் அவர்கள் கொழும்பு.
திரு நா. சாம்பசிவம் அவர்கள் கொழும்பு.
திரு சி. குற்றாலலிங்கம் அவர்கள் கொழும்பு.
திரு செ. நாகராசா அவர்கள் கொழும்பு.
திரு ந. ஸ்ரீகந்தராசா அவர்கள் கொழும்பு.
திரு சு. இராசலிங்கம் அவர்கள் கொழும்பு.
திரு இ. அருணாசலம் அவர்கள் கொழும்பு.
திரு மு. கதிர்காமநாதன் ஜே. பி. அவர்கள் கொழும்பு.
திரு தி. தம்பிராசா அவர்கள் திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான விசேஷ குரு சிவாகமகலாநிதி சிவஸ்ரீ வை. மு. பரமசாமி சிவாசார்ய குருமணி அவர்களால் வழங்கப்பட்ட

ஆசியுரை

உ

ஓம் கணபதயே நம
ஓம் சிவசக்திப்யோ நம

"ஓம் ஸ்ரீ நாகபூஷணாம்பிகாயைநமோ நம"

நயினைத்வீப நிவாஸிநீம் நதிகிருதாம் ஆனந்தசந்தாயினீம்,
பக்தாரிஷ்ட நிவாரிணீம் விதிசுதைர் நாகைப் புராபூஜிதாம்,
நாகானாம் ஜனநீதி லோகவசனைக்கியாதாம் சுபாம் ஸாஸ்வதாம்
நௌமித்வாம் பரதேவதாம் மம மனோபீஷ்டார்த்த சித்திப்ரதாம் !

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரீ நாராயணீ நமோஸ்துதே !

ஸகலமங்கலஸ்வரூபிணீ, அகிலஸம்பத்தையும் அளிப்பவளே, சரணடையக் கூடிய கௌரீ த்ரிபுராரி ஸதியே, நாராயணீயே நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

இந்த சுலோகத்தில் சர்வமங்களா, சிவே, கௌரீ, நாராயணீ என்ற அம்பிகையின் நான்கு நாமங்கள் வருகின்றன. எப்போதும் மங்கலத்துடன் நித்ய சுமங்கலியாக இருப்பவள் அம்பிகை. சிவை என்றாலே மங்கலம் என்றுதான் பொருள். விஷ்ணுவும் அம்பிகையும் ஒருவரே இதனாலேயே அம்பிகைக்கு நாராயணீ என்று ஒரு பெயர்.

சர்வமங்களா என்றால் எப்போதும் மங்களத்தைச் செய்பவள் என்றும் பொருள் கூறலாம், சுபமான எதையுமே மங்கலம் என்று குறிப்பிடுவதுண்டு. சுமங்கலிகளை மங்கல மடந்தை என்கிறது தமிழ் இலக்கியம். மங்கலா என்ற சம்ஸ்கிருதச் சொல் மங்கலமாகி சங்ககாலத்திலேயே தமிழ் வார்த்தையாகிவிட்டது. மங்கல மடந்தை மங்களாதேவி என்ற நாமங்கள் அம்பிகையையே குறிக்கும்.

புறப்பொருள் வெண்பாமாலை, பொலிவையும் ஆக்கத்தையும் மங்கலம் எனக்குறிப்பிடுகிறது. திருக்குறளில் மங்கலம் நன்மை என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. பிங்கலநிகண்டு மங்கலம் என்றால் நற்செயல் என்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவே என்ற சிவபெருமான் பெயரையே அம்பிகை வைத்துக்கொண்டு விஷ்ணு ரூபிணியாக இருப்பதற்குக் காரணம் சிவனும், விஷ்ணுவும் என்னிடத்தில் ஐக்கியம் என்பதைக் காட்டவேதான்.

லலிதாஸஹஸ்ரநாமம் அதாவது அம்பிகையே சரணமென்பதாக நினைத்திருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களெல்லோரையும் அம்பாள் காப்பாற்றுகிறாரென்றும், மற்றக் குணங்களில்லா விட்டாலும் அம்பாளுடைய நாமங்களை தியானித்துக்கொண்டு அபய சித்தத்துடன் உபாசிப்பவர்கள் மலைபோன்ற ஆபத்துக்களுக்குட்பட்டிருந்தாலும் அவர்களையும் அம்பாள் காப்பாற்றுகிறாள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் புதிய திருமஞ்சத்தை அமைக்கும் பணியில் ஆலய நிர்வாகத்தினருடன் அல்லும் பகலும் முன்னின்று உழைத்த மஞ்சத் திருவிழா உபயகாரர்களின் நிர்வாக சபைத் தலைவர் திரு. அருளம்பலம் சண்முகநாதன் J.P. அவர்களும், உபதலைவர் திரு. பொ. திருச்செல்வம் அவர்களும், செயலாளர் திரு. பொ. கலைநாதன் அவர்களும், உப செயலாளர் திரு. ச. பரமேஸ்வரன் அவர்களும், பொருளாளர் திரு. பொ. பரமலிங்கம் அவர்களும், உப பொருளாளர் திரு. மு. கந்தசாமி அவர்களும் ஏனைய திருவிழா உபயகாரர்களும் முக்கிய இடம் பெறுகின்றனர்.

இப்பெரும் மஞ்சத் திருப்பணி செவ்வனே நடைபெற ஆக்கமும் ஊக்கமுமளித்தும் பலவகையாலும் தொண்டுகள் புரிந்தும் வருகின்ற அறங்காவலர் சபையினர்களும், மஞ்சத்திருவிழா உறுப்பினர்களும், வெளியூர் அன்பர்களும், உள்ளூர் அன்பர்களும், இப்பணியில் பொருளுதவி செய்தும் ஏனையவகைகளிலும் ஈடுபட்ட எல்லா அன்பர்கள்இ அடியார்கட்கும், இம்மலர் சிறப்பாக வெளிவர உதவி செய்த அனைவருக்கும் அஷ்டஸ்வர்யங்களும் ஆரோக்கிய திடகாத்திரமும் சகல சம்பத்துக்களும் சித்திக்க ஸ்ரீஉலகமாதாவாகிய அன்னை ஸ்ரீநாகபூசணி அம்பாள் திருவருள் புரிவாளாக. உலகமக்கள் அனைவரும் அம்பிகையின் திருவருளைப் பெற்று சகல செல்வங்களோடு பல்லாண்டு வாழ்வார்களாக என வாழ்த்தி, என்றும் எமது அன்பார்ந்த ஆசீர்வாதத்தை வழங்கி, ஸ்ரீ நாகபூஷணாம்பிகையின் திருவருள் துணை கொண்டு எல்லோரையும் நீடூழி வாழ்க வாழ்கவென்று வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணல ரடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினா லவர்நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையா மெனிலுலகர் முன்வருகென வுரைப்பார்.

ஸர்வமங்களானிபவந்து!
ஸர்வமங்களானிபவந்து!!

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குரு, கிரியா கலாப முத்தாமணி சிவஸ்ரீ சம்பு. மகேஸ்வரக்குருக்கள் அவர்களால் வழங்கப்பட்ட

வாழ்த்துரை

இலங்காதீவின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ் நகரின் அணித்தாய் உள்ள சப்ததீவுகளின் மத்தியில் சிகரம்போல் விளங்கும் மணிபல்லவம் என்ற நயினை நகரில் ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது என்பதை எல்லோரும் அறிவீர்கள். இவ் ஆலயத்திலே அடியார்கள், மக்கட்பேறு வேண்டி நாகவழிபாடு செய்து குழந்தைச் செல்வங்களைப் பெற்றுள்ளனர். அன்று தொட்டு இன்றுவரை, காலங் காலமாக இவ் வழிபாடு நடை பெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் 1963ம் ஆண்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்வருடம் முதல் பதினாறு நாட்கள் மஹோற்சவ தினமாக ஆரம்பிக்கப்பட்டது. அவ்வருடத்திலேயே கொழும்பு வாழ் நயினை வர்த்தகப் பெருமக்கள் பத்தாம் திருவிழாவைப் பொறுப்பேற்று அதனை மஞ்சத்திருவிழாவாக்கி வெகு சிறப்பாக அன்று தொடக்கம் இன்றுவரை நடாத்தி வருகின்றனர். அவ்வாண்டிலேயே அம்பிகைக்கு ஓர் அழகிய மஞ்சம் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு இவர்கள் மஞ்சத்திருப்பணிச் சபையை உருவாக்கி அதன் பயனாக 1981ம் ஆண்டு புதிய மஞ்சம் அமைத்து வெள்ளோட்டம் நடைபெற்றது. புதிய மஞ்சத்தில் அம்பாள் பவனிவந்த அந்தக்காட்சி இன்றும் எனது மனக் கண் முன் நிழலாகத் தோன்றுகின்றது. 03. 03. 1986ல் துரதிஷ்டவசமாக அம்பிகையின் மஞ்சத்தினை இழக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் அம்பிகையின் அருட்கடாட்சத்தாலும், மஞ்சத்திருவிழா உபயகாரர்களின் அயராத உழைப்பாலும், ஆலய அறங்காவலர்களின் ஒத்துழைப்புடன் ஈரேழு ஆண்டுகளின் பின் அராலியூர் சிற்பக்லாநிதி சி. அமரசிங்கம் அவர்களால் புதிய மஞ்சம் மிக அழகாக உருவாக்கப்பட்டது. மிலேனியம் ஆண்டில் அம்பிகை தனது புதிய மஞ்சத்தில் பவனிவந்து அடியார்களுக்கு அருள் சுரந்தாள். அம்பிகையின் மஞ்சக்காட்சியைக் கண்டு பக்தர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

இக்கட்டான காலகட்டத்தில் நயினை கொழும்பு வாழ் வர்த்தகர் திரு அ. சண்முகநாதன் J.P அவர்களுடைய விடாமுயற்சியால், நயினை கொழும்பு வாழ் வர்த்தகர்களினதும், வெளிநாடு வாழ் நயினை அன்பர்களினதும் உதவிகளுடன் ஆலய அறங்காவலர் சபையினரின் பெரும் பங்களிப்புடன் இவ் அழகிய மஞ்சம் பல இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வெகுசிறப்பாகப் பத்தாம் திருவிழாவன்று திருவீதியுலா நடைபெற்றது என்பதை மனநிறைவுடன் அறியத்தருகிறேன். அத்துடன் நான் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். மஞ்சத்திருவிழா உபயகாரர்களும், ஆலய அறங்காவலர் சபையினரும், அடியார்களும் சிறப்புற வாழவும் அம்பிகையின் அருள் பெறவும் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

சுபம்

ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபைத் தலைவரின் பாராட்டுரை

நயினாதீவு செம்மனத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்குப் புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்டம் 1971 இல் நடைபெற்ற அன்று அத்தேரினை அழகுறச் செய்த சிற்பக் கலாஜோதி அமரர் திரு செ. கந்தசாமி ஆசாரியாருடன் அக்கோவில் மருத மர நிழலில் நின்று, கொழும்பு வாழ் வர்த்தகப் பிரமுகர்கள் கலந்துரையாடிக் கொண்டு நின்றார்கள். இவர்களில் மிக முக்கியமாக அமரர் திரு. மு. பொன்னம்பலமும் மற்றும் அம்பாள் கோவில் 10ம் திருவிழா உபயகாரர் பலரும் ஊர்ப்பிரமுகர்களும் அடங்குவர். நடைபெற்ற உரையாடலில் அம்பாளுக்கு ஒரு மஞ்சம் செய்யவேண்டும் என்பது தான் கருப்பொருளாக இருந்தது. அன்று விநாயகரின் வீதியில் கலந்துரையாடி எடுக்கப் பெற்ற முடிவின் பெறுபேற்றால் அமரர் திரு. செ. கந்தசாமி அவர்களால் அம்பாளுக்கு வியத்தகு மஞ்சம் ஒன்று உருவாக்கப் பெற்று 12.07.1981 இல் வெள்ளோட்டம் நடை பெற்றது. அம்பாள் இம்மஞ்சத்தில் ஐந்து தடவைகள் 10ம் நாள் உபயத் திருவிழாவுக்கு வீதியுலா வந்தாள். 1986. 03. 03 இல் இடம் பெற்ற அரசபடையின் அர்த்தமற்ற தீவைப்பால் அம்பாளின் மதிப்பிடப்பட முடியாத பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அக்கினி தேவனின் நாக்கிற்கு இரையாகி விட்டன. இந்த வகையில் விநாயகப் பெருமான், சுப்பிரமணியப் பெருமான் தேர்களும், அம்பாளின் மஞ்சமும் மதிக்க முடியாத கலைச் செல்வங்களாகும். இந்த இழப்பினை அகில உலகமுமே கண்டித்தது. இந்துப் பெருமக்களுக்கு தாங்க முடியாத மனக் கவலை. எப்படியாகிலும் இக்கலைச் செல்வங்கட்கு ஈடாக இந்த வீதியில் புதிய தேர்களையும், மஞ்சத்தையும் செய்து மும்மூர்த்திகளையும் வீதியுலாக் கொண்டுவர வேண்டும் என்று 1986இல் நாம் திடசங்கற்பம் செய்து கொண்டோம். அப்போதைய அறங்காவலர் சபைத் தலைவராக இருந்தவர் அமரர் திரு த. குலசேகரம்பிள்ளை (யாழ் செயலக மேலதிக உதவி அரச அதிபர், பொதுசனத் தொடர்பு அதிகாரி) நான் செயலாளர் ஆகவும் அமரர் திரு சி. நா. மதியாபரணம் J.P. அவர்கள் பொருளாளராகவும் இருந்தோம். எம்முடன் திரு அ. சண்முகநாதன் J.P. அவர்களும் ஏனைய உறுப்பினர்களில் ஒருவருமாவார். முன்னுரிமை அடிப்படையில் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்து வந்தோம். இந்த வகையில் தேர்கள், மஞ்சம், சப்பரம் என்பவற்றைச் செய்வதற்கான மரங்களை உடனுக்குடன் கொள்வனவு செய்து பிள்ளையார் தேர் வேலையும் சுப்பிரமணியர் தேர் வேலையும் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சுமார் 10 வருடங்கள் செயற்பாடுகள் பின் தள்ளப்பட்டு விட்டன. இப்படியான சூழ்நிலையில் 1992 இல் என்னைத் தன் பணிகளைத் தலைமை தாங்கிச் செயல்படும் படி அன்னை ஆசீர்வதித்து தெரிவு செய்தாள். "என்கடன் பணி செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதே" என்ற கருத்துப்படி 1995ம் ஆண்டு மே மாதம் முதல் மீண்டும் தேர் வேலைகளைச் செய்த கலைஞர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வேலைகளை ஊக்குவித்துச் செய்து கொண்டிருந்த வேளையில் 1997ல் கோவில் புனரமைப்பு வேலையையும் ஆரம்பித்து 1998ல் கும்பாபிஷேகமும் செய்ததோடு கண்டவர்கள் வியக்கும்படியாக ஆலயத்தினை அழகுற புனரமைத்தோம். 1998ல் விநாயகர் தேரினையும், 1999ல் சுப்பிரமணியர் தேரினையும் வீதியுலா வர அன்னை அருள் கூர்ந்தாள் எனினும் 1999ல் மஞ்சத்தையும் வீதியுலா கொண்டு வர வேண்டும் என்ற எம்திட்டத்தை அம்பாள் மாற்றி வைத்தாள். 2000ம் ஆண்டு மகாயாகப் பூர்த்தியின் பின்தான் மஞ்சத்தில் தாம் வீதியுலா வரவேண்டும் என்பது அவள் சித்தமாக இருந்தாள் என்பதனை யார் தான் அறிவார்.

புதிதாகச் செய்யப்பட வேண்டிய மஞ்சத்தை யாரைக் கொண்டு செய்ய வேண்டும் என்ற கருத்து எமக்கிடையே எழுந்த போது உபயகாரர்களும் பூரணமாக எம்முடன் ஒத்துழைத்து அமரர் சிற்பக் கலாஜோதி செ. கந்தசாமியாருடன் முதலில் கலந்துரையாடி அவரைக் கொண்டே செய்வது என முடிவு செய்தோம். இதன்படி அமரர் திரு. செ. கந்தசாமி ஸ்தபதியாருடன் 08.08. 1998ல் கலந்துரையாடி முடிவு செய்தோம். 13. 08. 1998 ல் திரு செ. கந்தசாமி அவர்கள் வந்து தேவையான மரங்களையெல்லாம் எடுத்து வைத்ததோடு மேலும் தேவையான மரங்கள் பற்றிய விபரங்களையும் தந்து சென்றார். மீண்டும் 22.08.1998ல் நயினாதீவிற்கு வந்த அமரர் அவர்கள், தனக்குள்ள சில இடர் பாடுகளைக் கூறி குறிப்பிட்ட தினத்துக்குள் தன்னால் மஞ்சத்தைச் செய்து தரமுடியாமல் இருப்பதாகக் கூறிதோடு, எப்படியாக இருந்தாலும் அம்பாளின் வீதியில் ஒரு கலையம்சம் நிறைந்த மஞ்சம் ஒன்று ஓடும் என்று கூறினார். உங்களின் கலைச் செல்வம் உலாவந்த வீதியில் அதே அம்சத்துடன் கூடிய மஞ்சம் ஒன்று ஓடும் என்று அவருக்கு கூறி வைத்தேன்.

இப்படியான சூழ்நிலையில் நாம் யாரைக் கொண்டு மஞ்சத்தினை செய்ய வேண்டும் என உபயகாரர்களை அழைத்துக் கேட்டோம். தற்போது சுப்பிரமணியர் தேரைச் செய்யும் ஸ்தபதியார் திரு. சி அமரசிங்கம் அவர்களைக் கொண்டு செய்தால் என்ன என்ற கருத்தை அவர்கள் கூறினார்கள். இதன்படி அறங்காவலர்களும், உபயகாரர்களும் ஏகோபித்து எடுத்த முடிபின் பிரகாரம் உருவாகியது தான் 11.06.2000ல் வெள்ளோட்டம் விடப்பட்ட மஞ்சம், உண்மையில் இது ஒரு வியத்தகு கலைச் செல்வம் என்றால் அது மிகையாகாது. இதனை அழகுறச் செய்து தந்த அராலியூர் திரு சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதியாரும், அவர் உடன்பிறப்பாகிய சின்னத்தம்பி கணேசலிங்கம் ஆசாரியாரும் ஆலய கலைச் செல்வங்களாகிய சுப்பிரமணியர் தேரையும், மஞ்சத்தையும் சிறப்பாகச் செய்து கலை உலகில் நந்தா ஒளி விளக்காய் திகழ்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

கொழும்புவாழ் நயினை வர்த்தகப்பிரமுகர்களும், 10ம் திருவிழா உபயகாரர்களும் 2000.06.11ல் வெள்ளோட்டம் ஓடிய மஞ்சத்திற்கு இரும்பு அச்சுகள், பவளக்கால்களுக்கான முதிரை மரங்கள், வடக்கயிறு போன்றவற்றைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் உரிய காலத்தில் அனுப்பி வைத்தார்கள், அத்தோடு தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பாக பொருட்கள் உட்பட ரூபா 500,000 வரை உதவியுள்ளார்கள். இந்தவகையில் திருவாளர்கள் அ. சண்முகநாதன் J.P. வே. க. த. த. சிவானந்தன், சி.நா.ச. பரமேஸ்வரன் ஆகியோர் மிகுந்த ஊக்கத்துடன் கொழும்பில் இருந்து செயல்பட்டார்கள் என்பதை நான் இங்கு எடுதுக் கூறக் கடமைப்பட்ட வனாகின்றேன். தமது உபயநாளன்று விழாவில் கலந்து சிறப்பிக்க முடியாமல் திருமலைவரை வந்து மீண்டும் கொழும்பிற்கு இவர்கள் சென்ற செய்திகேட்டு மிகவும் மனத்துன்பம் கொண்டோம். இவர்களின் பூரண ஒத்துழைப்பும், ஊக்கமும் தான், மிக குறுகிய காலத்தில் இம்மஞ்சம் வெள்ளோட்டம் வரக்காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது. 03. 03. 1986ல் அக்கினிதேவனின் சுடருக்கு இரையாகிய பெறுமதிமிக்க அன்னையின் சொத்துக்கள் மஞ்சவெள்ளோட்டத்துடன் பூரணமாக நிறைவேறிவிட்டன. 2001ம் ஆண்டு தொடக்கம் தைப்பூசவிழாவன்றும், இரவு அம்பாள் மஞ்சத்தில் வீதி உலாவர வேண்டும் என அறங்காவலர் சபை எடுத்த முடிபின் பிரகாரம், அம்பாள் 7.02.2001 தைபூச நாளன்று மஞ்சத்தில் வீதி உலாவந்து அடியார்கட்கு அருள்பாலித்தாள்.

மஞ்ச வெள்ளோட்ட விழாவன்று இச் சிறப்பு மலரினை வெளியிட்டு, சிற்பாசாரியார் அவர்களைப் பாராட்டி கௌரவிக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தோம். இருந்தும் அப்போது ஏற்பட்ட பிரயாணச் சீரின்மையாது எமது மலர் வெளியீட்டு முயற்சியினை தடை செய்தது. இருப்பினும் மஞ்ச வெள்ளோட்டம் நடந்து ஓர் ஆண்டு நிறைவு நாளான இன்று இம்மலரினை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்வும் மனநிறைவும் அடைகிறோம்.

2001ம் வருட உயர்திருவிழாவையொட்டி, இவ்விஷேட மலரினை மஞ்ச திருவிழா உபயகாரர்கள் வெளியிட இருக்கும் செய்தி கேட்டு அறங்காவலர் சபையின் தலைவர் என்ற முறையில் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் உபயகாரர்கட்குக் கூறிவைக்கின்றேன். அத்துடன் அம்பிகையின் திருவருள் இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இனிதே கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அனைத்து மக்களும் நலம் பெற வேண்டுமென விரும்புகிறேன்.

நன்றி

ஆ. தியாகராசா
தலைவர், அறங்காவலர் சபை
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில்
நயினாதீவு.

நேரான சிந்தனைகள் மனிதனிடம் உயர்ந்த பண்புகளை வளர்க்கின்றன. இந் நற்பண்புகள் உள்ளத்தைத் தெய்வீகப் பயணத்துக்கு இட்டுச் செல்வதற்கும், உலகியல் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கும் தகுதியூட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மஞ்சத்திருவிழா உபயகாரர்களின் சார்பில் தலைவரின்

பாராட்டு உரையும் நன்றி உரையும்.

இலங்கையின் வடமாகணத்தில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான நயினாதீவில் கோவில் கொண்டருளி இருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு 1980 ம் ஆண்டுவரை ஒரு திருமஞ்சம் இல்லாதது அடியவர் மனதில் பெரும் குறையாக இருந்தது. அக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 10ம் திருவிழா உபயகாரர்களும், கொழும்பு வாழ் வர்த்தகர்களும் இணைந்து 1981ம் ஆண்டு அம்பாளுக்குப் பெறுமதிமிக்க அழகிய ஒரு திருமஞ்சத்தை அமைத்துக் கொடுத்தனர். 1986ம் ஆண்டு இத்தீவகத்தில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக அம்மஞ்சம் தீக்கிரையாக்கப்பட்டது. இது அம்பிகை அடியவர் மனங்களில் பதிந்த ஒரு துன்ப நிகழ்வாகும்.

கடந்த பல வருடங்களாக நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த பல போர்க்காலச் சூழ் நிலைகளால் மீண்டும் அம்பாளுக்கு ஒரு திருமஞ்சத்தினை அமைப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் கைகூடவில்லை. அம்பாள் திருவருளால் அண்மையில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. ஆ. தியாகராசா அவர்களின் தலைமையிலான அறங்காவலர் சபையினருக்கும், மஞ்சத் திருவிழா உபயகாரர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, மஞ்சத் திருவிழா உபயகாரர்களின் பங்களிப்புடன் திருமஞ்சம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. திருமஞ்சத்தினை அமைப்பதற்கான முழுப்பொறுப்பையும் ஆலய அறங்காவலர் சபையிடம் ஒப்படைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆலய அறங்காவலர் சபையினர், சிற்பக்கலைஞர் அராலியூர் திரு சி அமரசிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்டு திருமஞ்சத்தினை அமைக்க ஏற்பாடு செய்தனர். சிற்பாசாரியாரின் விடாமுயற்சியின் பயனாக 11. 06. 2000 ஞாயிற்றுக்கிழமை 10ம் திருவிழாவன்று பகல் திருமஞ்ச வெள்ளோட்ட விழாவும், அன்றிரவு மஞ்சத்திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இப்பாரிய திருப்பணி வேலையை இவ்வளவு சிரமத்தின் மத்தியிலும், அயராது மேற்பார்வை செய்து உரிய நேரத்தில் திருமஞ்சம் அமைவதற்கு முன்னின்று அல்லும் பகலும் உழைத்த அறங்காவலர் சபையினர் அனைவருக்கும், சிறப்பாகத் தலைவர் அவர்களுக்கும், மஞ்சத்தின் முழுவேலைகளையும் இரவு பகலாக பல இடர்பாடுகளின் மத்தியில் செய்து முடித்துத் தந்தமைக்காக மஞ்சத் திருவிழா உபயகாரார் சார்பிலும், எனது சார்பிலும் அராலியூர் சிற்பக்கலைஞர் திரு சி. அமரசிங்கம் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் பாராட்டுதலையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். திருமஞ்சம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய திருவிழா உபயகாரர் அனைவருக்கும் பாராட்டுக்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மஞ்சத்திருவிழா நிர்வாக சபையினர் என்னுடன் இணைந்து வழங்கிவரும் மனப்பூர்வ ஒத்துழைப்பு என்றும் மறக்கமுடியாதது. அம்பிகையின் நல்லருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை வேண்டுதல் செய்கின்றேன்.

அம்பிகையின் ஆலய புதிய மஞ்சத்திற்கு இரும்பு அச்சு, முதிரைப் பவளக்கால், வடம் என்பனவற்றைக் கொழும்பிலிருந்து, கொண்டு வருவதற்கு உதவிய கொழும்பு 4ம் குறுக்குத் தெரு பிரபல வர்த்தகர் குழந்தைவேல் தம்பிராசா அவர்களுக்கும் (S. S. R. & Co) எமது நன்றிகள் என்றும் உரியது. இவ்வன்பர் வருடம்தோறும் ஆலயத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை விருப்பத்தோடும் விசுவாசத்தோடும் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து அனுப்பியுதவி வருகின்றார்கள். அவரது தெய்வீகப் பணி மேன்மேலும் தொடரவேண்டும் என வேண்டிக் கொண்டு, அன்னையின் திருவருள் அவருக்குக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

திருமஞ்சத்திற்கு மின் இணைப்பு வழங்கி அலங்கரித்த யாழ் நியூட்டன் எலக்ரிக்கல்ஸ் நிறுவன உரிமையாளர் து. அழகரத்தினம் அவர்களுக்கும், நிறுவனத்தின் மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீபத்மநாதன் அவர்களுக்கும், உதவியாளர்களுக்கும், சிறப்பு மலர் வெளியிடுவதற்கு ஆசிகளையும் ஆக்கங்களையும் தந்துதவிய பெரியார்களுக்கும், விளம்பரங்களை தந்து உதவிய கொழும்பு வர்த்தகர்களுக்கும் எமது சபையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலரை குறுகிய காலத்தில் மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய யூனி ஆட்ஸ் அச்சக நிறுவன அதிபர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும், ஒத்தழைப்பு நல்கிய மஞ்சத்திருவிழா மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கி செவ்வைபார்த்து ஆக்கங்களை நல்ல முறையில் ஒழுங்கு படுத்தி நூலுருப்பெற உதவிய ஆலய நிறைவேற்று அலுவலர் நா. யோகநாதன் B. A அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் 2000ம் ஆண்டு மஞ்சத்திருவிழாவன்று இச்சிறப்பு மலர் வெளியிட முடியாமல் போயிற்று. இவ்வருடம் 2001ம் ஆண்டு மஞ்சத்திருவிழாவன்று இம்மலர் வெளியிடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அன்புள்ளங்கள் அனைவருக்கும் மஞ்த்திருவிழா உபயகாரர்கள் சார்பில் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அம்பாளின் நல்லாசிகள் அனைவருக்கும் கிடைப்பதாக

"மேன்மைகொள் சைவ நீதி விழங்குக உலகமெல்லாம்"

அ. சண்முகநாதன் **J.P.**
தலைவர்
திருமஞ்சத் திருவிழா நிர்வாக சபை.
கொழும்பு - நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

மஞ்சத்திருவிழா

செயலாளரின் சிந்தனையிலிருந்து

அம்பிகையின் திருவருளால் முன்னைய மஞ்சத்தை ஊருவாக்கும் வேலைகள் 1977ம் ஆண்டு ஆரம்பமாகியது. மஞ்சவேலைகள் பூர்த்தியாகி 1981ம் ஆண்டு வெள்ளோட்டமும் நடைபெற்றது. ஐந்து வருடங்களின் பின் துரதிஷ்டவசமாக வன்செயலால் மஞ்சம் எரிக்கப்பட்டு தீக்கிரையானது எமது உள்ளங்களில் மிகவும் வேதனையை ஏற்படுத்திய இச் சம்பவம் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாதது. அம்பாலுக்கு புதிய திருமஞ்சம் ஒன்று ஊருவாக்கப்பட்டு அம்பாளின் ஆலய வீதியில் உலாவரவேண்டும் என்ற பேராவல் பலர் உள்ளங்களில் வேர்ரூன்ற தொடங்கியது. மஞ்சத் திருவிழாச் சபையின் கௌரவத் தலைவர் திரு. அ. சண்முகநாதன் J.P. அவர்களினதும் ஏனைய உறுப்பினர்களினதும் விடாமுயற்சியும் விருப்பமும் நிறைவேற அம்பாள் ஆலய அங்கத்தவர்கள் சபையினரின் அனுசரனையும் எமக்கு தாராளமாக இருந்தது.

இப்புதிய மஞ்சத்தை அமைக்கும் முழுப்பொறுப்பையும் ஆலய அறங்காவலர் சபை ஏற்றுக் கொண்டது. மஞ்சம் உருவாவதற்கு ஏற்பட்ட செலவின் பெரும் பகுதியை அறங்காவலர் சபையே பொறுப்பேற்றது. மஞ்சத்திருவிழா உபயகாரர்களின் சார்பில் செலவின் ஒரு பகுதிப் பணம் பங்களிப்பாக செய்யப்பட்டது. அந்த வகையில் நிதியுதவி வழங்கிய அன்புள்ளங்கள் பாராட்டுதலுக்குரியவர்கள். இம்மலர் சிறப்பாக வெளிவருவதற்கு உதவிய யூனி ஆட்ஸ் நிறுவனத்தின் அதிபர் திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் ஆலய நிறைவேற்று அலுவலர் திரு. நா. யோகநாதன் B. A. அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுளோம்.

புதிய மஞ்சம் வீதியுலா வரவேண்டும் என்ற எமது கனவு நனவாகுவதற்கு அம்பிகையின் திருவருளும், அன்பர்களின் ஒத்துழைப்பும், அறங்காவலர் சபையினரது பேராதரவும், மஞ்சத்திருவிழா உபயகாரர்களின் பங்களிப்பும் பேருதவியாக அமைந்தது.

அழகிய வேலைப்பாடுடன் கூடிய திருமஞ்சத்தை உருவாக்கிய சிற்பகலா விநோதன் திரு. சி. அமரசிங்கம் ஸ்தபதியர் அவர்களுக்கும், அவர்தம் குழுவினருக்கும், மஞ்சத்தை மின் அலங்காரம் செய்து பொலிவூட்டிய யாழ். நியூட்டன் எலக்ரிக்கல்ஸ் நிறுவனத்தினருக்கும் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இச்சிறப்பு மலர் இவ்வருட மஞ்சத்திருவிழாவன்று வெளிவர வாய்ப்புக் கிடைத்தமை அம்பிகையின் திருவருள் என்றே கூறவேண்டும். அம்பாளின் அனுக்கிரகம் எல்லோருக்கும் இனிதே கிடைக்கப் பிராத்திக்கின்றேன்.

பொ. கலைநாதன்
செயலாளர்
திருமஞ்சத்திருவிழா நிர்வாக சபை
கொழும்பு - நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமஞ்சத்தை உருவாக்கிய ஸ்தபதியர் சிற்பகலா விநோதன் சி. அமரசிங்கம் அவர்களை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர், திரு. கா. ஆ. தியாகராசா அவர்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கிக் கௌரவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் திருவிழா பத்தாம் திருவிழாவாகி மஞ்சத் திருவிழாவான வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள தீவுகளில் அருள் தீவாக, ஆன்மீகத் தீவாக, அடியார்களை அரவணைக்கும் தீவாக, அன்றும் இன்றும் திகழ்வது நயினாதீவு. இத்தீவின் அனைத்துப் பெருமைக்கும் காரணமாய் அமைந்தது எம்பெருமாட்டியாம் நாகபூஷணி அம்பாள் இத்தீவில் கோவில் கொண்டெழுந்தருளி அருள் பாலிப்பதினாலேயாகும். இத்தீவில் அம்பாள் சுயம்பு மூர்த்தமாய் எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். அம்பாள் ஆலய வரலாற்றை பூரணமாக யாராலும் கணக்கிட முடியாது. அனைத்துக் கணிப்பீட்டாளர்களின் கணிப்பீட்டிற்கும் அப்பாற்பட்ட ஆலயமாக நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் திகழ்கின்றது என்பதே உண்மையாகும்.

நயினை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் அன்று பத்து நாட்களும் பூங்காவனத் திருவிழாவுடன் பதினொரு நாட்களுமாக அமைந்திருந்தது. ஆனிப் பூரணைத் தினத்தன்று காலை தேரும், மாலை தீர்த்தமும், கொடியிறக்கமும் அமைந்து இருந்தன. ஆனிப்பூரணைத் தினத்திற்குப் பத்து நாட்களுக்கு முன் கொடியேறி திருவிழா நடைபெறும். வருடாந்த மகோற்சவம் பதினொரு தினமாக இருந்த காலத்தில் கொழும்பார் திருவிழா கொழும்பு வாழ் நயினை வர்த்தகர்கள், ஊழியர்களால் நடத்தப்பட்டு வந்தது. கொழும்பார் திருவிழாவான அன்றைய நாலாந் திருவிழா சிறப்பான திருவிழாவாக அமைந்து இருந்தது. இந்திய, இலங்கைக் கலைஞர்களின் சங்கீதக் கச்சேரி, சொற்பொழிவுகள், மேளக்கச்சேரி என்பன நடைபெறும். கொழும்பார் திருவிழா என்று அழைக்கப்பட்ட நாலாந் திருவிழாவை நடத்தியவர்களில் முக்கியமானவர் திரு. மு. க. பொன்னம்பலம் அவர்களாகும். 1960ம் ஆண்டில் அமரர் திரு. ம. ஸ்ரீகாந்தா (முன்னாள் யாழ். அரச அதிபர்,) நயினைநாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபைத் தலைவராக இருந்த காலத்தில், அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் பதினைந்து தினங்களாக மாற்றப்பட்டது. நாலாந் திருவிழாவான கொழும்பார் திருவிழா பத்தாந் திருவிழாவாக மாறியது. பத்தாந் திருவிழாவாக இத்திருவிழாவை மாற்றி கேட்டுப் பெற்றுக் கொண்டவர் அமரர் திரு. மு. க. பொன்னம்பலம் அவர்களே. அமரர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் (அன்றைய அறங்காவலர் சபைத் தலைவர்) இத்திருவிழாவை 10ம் திருவிழாவாக மாற்றிக் கொடுக்கும் பொழுது திரு. மு. க. பொன்னம்பலம் அவர்களிடம் திருமஞ்சம் செய்து, மஞ்சத் திருவிழாவாக இத்திருவிழாவை இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் இத்திருவிழாவை கையளித்தார். தலைவரின் கோரிக்கையை அமரர் திரு. மு. க. பொன்னம்பலம் உபயகாரர் சார்பாக ஏற்றுக் கொண்டார். அமரர் திரு. மு. க. பொன்னம்பலம் அவர்கள் உயிருடன் இருந்த காலக்கட்டத்தில், திருநெல்வேலி சிற்பக் கலாநிதி அமரர் கந்தசாமி ஆசாரி அவர்கள் திருமஞ்சத்துக்கான, கால் கோள் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980ம் ஆண்டில் திரு. மு. க. பொன்னம்பலம் அவர்கள், அம்பாளுக்கு அழகிய மஞ்சம் வீதிவலம் வரவேண்டும் என்ற பேராவலோடு, வேலைகள் பூர்த்தியாகும் வேளையில் அம்பாள் திருவடி அடைந்தார். அவரைத் தொடர்ந்து திரு. அ. சண்முகநாதன் சமாதான நீதவான் அவர்கள் திருவிழாச் சபையின் தலைமைப் பதவியை ஏற்று நடத்தி வருகின்றார். அன்று திருமஞ்சத்தை உருவாக்கிய அமரர் கந்தசாமி ஆசாரி அவர்களால் திருமஞ்ச வெள்ளோட்டம் 1981ம் ஆண்டு நடைபெற்றது. 1986ம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக கடற் படையினரால் விநாயகர் தேர், முருகன் தேர், அம்பாளின் திருமஞ்சம் என்பன தீக்கிரையாக்கப்பட்டது. அன்னிய ஆட்சியின் காலகட்டத்தில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியில் அம்பாள் ஆலயமும், செப்புத் தேர், பவளத் தேர் என்பனவும் போர்த்துக்கீச, ஒல்லாந்தப் படைகளால் அழிக்கப்பட்டன. அவ்வரலாற்றை ஒட்டியதாகவே அம்பாளின் விநாயகர் தேர், முருகன் தேர், திருமஞ்சம் என்பன தீமூட்டி அழிக்கப்பட்டுள்ளது. முன்னைய அழிப்பு கர்ண பரம்பரைக் கதைகள் என்றாலும் உண்மையான வரலாறுதான் என்பதை 1958, 1986ம் ஆண்டுகளில் நடைபெற்ற அழிப்பு நிகழ்வுகள் முன்னைய வரலாற்றையும் உண்மையானவை தான் என்பதை அடியொற்றி உணர்த்தி நிற்கின்றது. நயினை அம்பாள் ஆலய தொன்மையான வரலாறுகளை, கர்ண பரம்பரைக் கதைகள் மூலம்தான் அறிய முடிகின்றது. 1958ம் 1986ம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற அழிப்புக்கள் கர்ணபரம்பரைக் கதைகளும் உண்மையான வரலாறுதான் என்பதை உணர்த்தி நிற்கின்றது. கொழும்பார் திருவிழா என்று அழைக்கப்பட்ட 4ம் திருவிழா 10ம் திருவிழாவாக மாறி திருமஞ்சத் திருவிழாவாக அமைய அம்பாளின் தெய்வீகத் திருவருள் பாலித்துள்ளது. பழைய திருமஞ்சமும் புதிய திருமஞ்சமும் உருவாக உழைத்த ஆலய அறங்காவலர்கள், உருவாக்கிய சிற்பக் கலாநிதி அராலியூர் சி. அமரசிங்கம் அவர்கள் அவர் தம் சகோதரர், மற்றும் குழுவினருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

நயினை, நாகமணி கோபாலகிருஷ்ணன். J.P
மஞ்சத் திருவிழா உறுப்பினர்.
நயினாதீவு

கருணையே வடிவமாகிய இறைவன் உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடவேண்டியது நன்றியுடன் கூடிய கடமையாகும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் என அப்பர் பெருமான் இறைவன் நமக்கு தலை முதல் சகல கருவிகளையும் தந்தான் எனத் தெரியப்படுத்தி விட்டு, அக்கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச் செய்கின்றார். தலையே நீ வணங்காய்! கண்காள் காண்மின்களோ! மூக்கே நீ முகராய்! என எமது அங்கங்களை விழித்து நன்னெறி காட்டி நல்வழிப்படுத்துவதைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

அம்பிகைக்கு உருவாகிய அழகிய திருமஞ்சம்

"ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றவள்" அன்னை ஆதிபராசக்தி. அவளிடம் இருந்தே அண்ட சராசரங்கள் தோன்றின. மனிதரும், தேவரும், மாயா முனிவரும் அவள் குழந்தைகள். மும் மூர்த்திகளுக்கும் மூத்தவள் அம்பிகை. அவளின் அருட்பொலிவுள்ள இடங்கள் "சக்தி பீடங்கள்" என அழைக்கப்படுகின்றன. உலகெங்கும் அறுபத்து நான்கு சக்தி பீடங்கள் அமைந்துள்ளதாக ஆன்றோர்கள் கூறியுள்ளனர். இவற்றுள் யாழ்ப்பாணம் நயினாதீவில் அம்பிகை புவனேஸ்வரி பீடத்தில் நாகபூஷணி என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்து, வேண்டுவார்க்கு வேண்டியதை வேண்டியாங்கு ஈந்தருளுகின்றாள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே நயினாதீவு ஓர் வழிபாட்டிடமாக இருந்துள்ளது என்பதற்கு கர்ண பரம்பரையாக செவி வழியாகக் கேட்டுவரும் நிகழ்வுகளே சான்றாகவுள்ளன. ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை,காலச் செட்டிமார்களின் கடல்வழி வர்த்தகத்தின் போது அவர்களின் வழிபாட்டிடமாக நயினாதீவு நாகம்மாள் ஆலயம் இருந்துள்ளதாக அறிய முடிகிறது. நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயச் சுற்றாடல், மக்களும் பிறநாட்டு வணிகர்களும் கூடுகின்ற ஓர் இடமாக இருந்துள்ளது. இதற்கு எழுத்து மூலமான ஆதாரமாக, கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலநறுவயில் இருந்து இலங்கையை ஆண்ட மகாபராக்கிரமபாகு மன்னனால் பொறிக்கப்பட்ட சிலாசாசனம் (கல்வெட்டு) குறிப்பிடத்தக்கது. இச் சிலாசாசனம் ஆலய வீதியில் தற்பொழுதும் காணப்படுகின்றது.

புராதன பெருமை வாய்ந்த நாகபுஷணி அம்பாள் ஆலயத்தில், இலங்கையை ஆண்ட போத்துக்கேயர் காலத்திற்கு முன்பிருந்தே மகோற்சவங்கள் (உயர் திருவிழாக்கள்) நடைபெற்று வருவதாக அறிய முடிகின்றது. யாழ்ப்பாணச் செயலகத்தில் சைவ சமயக் கோவில்களைப் பற்றி 1882ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குறிப்புக்கள் அடங்கிய இடாப்பில் இவ்வாலயம் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றது. "ஆண்டுக்கொருமுறை ஆனி 10ந் திகதி தொடக்கம் 20ந் திகதி வரை 10 நாட்கள் திருவிழா என்றும், கோவில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக் கொண்டு வலம் வருதல் அல்லது தேரில் வலம் வருதல்" என்றும் அக்குறிப்பில் காணப்படுகின்றது.

பல நூற்றாண்டுகளாக உயர்திருவிழாக் காலங்களில் மிகச் சிறந்த கலை நயம் பொருந்திய வாகனங்களிலும், தேரிலும் பவனி வந்த அம்பிகைக்குத் திருமஞ்சம் இல்லாதிருந்தமை ஒரு பெரும் குறையாகவே இருந்து வந்தது. "எதை எப்போது எவரைக் கொண்டு செய்விக்க வேண்டும்" என்பதையெல்லாம் அம்பிகையே தீர்மானிக்கின்றாள். பத்து நாட்களாக இருந்த மகோற்சவம் பதினைந்து நாட்களாக மாற்றப்பட்டபோது பத்தாம் நாள் உற்சவம், நயினாதீவு வாழ் கொழும்பு வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1960 ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் இருந்து 1980ம் ஆண்டுவரை ஒரு வாகனத் திருவிழாவாகவே இத் திருவிழாவினை அவர்கள் செய்து வந்தார்கள். இருந்தாலும் அம்பிகையைத் திருமஞ்சத்தில் ஏற்றி வீதியுலாக் கொண்டுவர வேண்டும் என்னும் பெருவிருப்பு பத்தாம் திருவிழா உபயகாரர்கள் எல்லோர் மனதிலும் இருந்தது.

1979ம் ஆண்டு அம்பாளுக்கு ஓர் திருமஞ்சம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முற்று முழுதான பொறுப்புக்களையும் 10 ம் திருவிழா உபயகாரர்களே எற்றுக் கொண்டனர். இம் மஞ்சத்தினை அமைக்கும் பொறுப்பினை யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீ வாணன் சிற்பாலய அதிபர் சிற்பகலாஜோதி அமரர் செ. கந்தசாமி ஆச்சாரியார் அவர்களிடம் திருவிழா உபயகாரர்களினால் ஒப்படைக்கப்பட்டது. அழகும், வனப்பும் வியத்தகு கலை அம்சமும் பொருந்திய திருமஞ்சம் 1981ம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டு, அதே ஆண்டு 10ம் திருவிழா இரவு அம்பிகை திருமஞ்சத்தில் அரோகணித்து வீதியுலா வந்த அலங்காரக் காட்சி அம்பிகை அடியார்களின் மனங்களில் களிப்பேருவகையை ஏற்படுத்தியது. "அழகுக்கொருவரும் ஒவ்வாதவல்லியை அழகிய திருமஞ்சத்தில் ஏற்றி, மஞ்சத் திருவிழாவினை முதல் முதலாகச் செய்த பெருமையினை நயினைவாழ் கொழும்பு வர்த்தகர்கள் தமதாக்கிக் கொண்டனர்.

1986ம் ஆண்டு அம்பாள் ஆலய பல முகப்பில் நடைபெற்ற ஓர் குண்டு வெடிப்பை அடுத்து அம்பிகையின் மஞ்சம், விநாயகர், சுப்பிரமணியர் தேர்கள், சப்பறம் உட்பட ஏறக்குறைய நூறு லட்சம் ரூபா பெறுமதியான ஆலயச் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. திரு மஞ்சத்தை அழித்தவர்களால் அப்பிகை மஞ்சத்தில் அரோகணித்து வீதியுலா வந்த அந்த அருட் கோலக் காட்சியைக் கண்டவர்கள் மனங்களில் இருந்து அழிக்க முடியவில்லை.

நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகள் திரும்பவும் ஓர் புதிய மஞ்சத்தினை அமைப்பதற்குத் தடையாக இருந்தன. அம்பாள் ஆலய வீதியில் மஞ்சம் உலாவர வேண்டும் என்னும் பெரு விருப்பு அறங்காவலர் சபை உறுப்பினர்களுக்கும், திருவிழா உபயகாரருக்கும், அடியார்களுக்கும் மனத்தில் நீங்காமல் நிறைந்திருந்தது. 1997ம் ஆண்டு பாலஸ்தாபனத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டிய பெரும் திருப்பணி வேலைகளில் மஞ்சம் அமைக்கும் திட்டமும் சேர்க்கப்பட்டிருந்தது. குறிப்பிடப்பட்டிருந்த திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் திருப்பணி வேலைகளைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தோம்.

மகாகும்பாபிஷேகம் 1998ம் ஆண்டு சித்திரைமாதம் நிறைவுற்று, அதே வருடம் ஆனிமாதம் மகோற்சவம் முடிந்தவுடன் மஞ்சத்திருப்பணி வேலைகளை ஆரம்பிப்பதென அறங்காவலர் சபை முடிவு செய்தது. திருவிழா நிறைவுற்றதும் மஞ்ச வேலைகள் பற்றி ஆராய்வதற்கென அறங்காவலர் சபை கூடியது. இக்கூட்டத்தில் மஞ்சத் திருவிழா நிர்வாக சபையின் தலைவர் திரு அ. சண்முகநாதன் J.P பொருளாளர் திரு பொ. பரமலிங்கம். உறுப்பினர்கள் திருவாளர்கள் வே.க.த.த. சிவானந்தன், சி. குற்றாலலிங்கம், க. லோகநாதன், செ. நாகராசா, இ. சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சத்திருப்பணி வேலைகளுக்குத் தங்களால் முடிந்த உதவிகளைத் தாம் செய்வதாகவும், ரூபா ஐந்து இலட்சம் மஞ்சத் திருவிழா உபயகாரர்களிடமிருந்து வசூலித்துத் தருவதாகவும், மஞ்சத்திற்கு வேண்டிய பவளக்கால் மரங்கள் (முதிரை) இரும்பு அச்சு என்பவற்றைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்புவதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்ட திருவிழா உபயகாரர்கள் தெரிவித்தனர். இதனை நன்றியுடன் ஏற்றுக் கொண்ட அறங்காவலர் சபை, ஓர் தகுதியான ஆசாரியாரிடம் வேலைகளை ஒப்படைத்து 1999ம் ஆண்டு ஆனி உயர் திருவிழாவிற்கு அம்பாளின் அனுக்கிரகத்துடன் திருமஞ்சம் வீதியுலாவர ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும் என அறங்காவலர் சபை அறிவித்தது. மஞ்சம் செய்கின்ற பொறுப்பினை அராலியூர் "சிற்ப கலா வினோதன்" சின்னத்தம்பி அமரசிங்கம் ஆசாரியார் தலைமையில் அவரது சகோதரர் சி. கணேசலிங்கம் ஆசாரியாரிடமும் கூட்டாக ஒப்படைக்கப்பட்டது.

கலையாக்கத்திற்கு காலம் நிர்ணயிக்க முடியாது. ஒரு கலைஞனின் நிறைவான கலையாற்றல் அவன் வடிக்கும் சிற்பங்களில் பிரதிபலிக்க வேண்டும் எனில் அவன் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற் படவேண்டும் அதிகாரக் கெடுபிடிகளுக்கு அஞ்சாத திடமான மனலயமே காலத்தால் அழியாமல் நிலைத்து நிற்கும் சிற்பங்களாக, கலைப் படைப்புகளாக என்றும் நிலைத்து நிற்கும். நாம் மஞ்சம் செய்வதற்கு நியமித்த ஆசாரியார் அவர்கள் நான் மேற்குறிப்பிட்ட மனப்பாங்குள்ளவராக இருந்தார். "கலைப் பொக்கிசமான அம்பாளின் தேர் ஓடும் இந்த திருவீதியில் நான் செய்யும் மஞ்சம் அந்தத் தேர் போன்று இல்லாவிடினும் எனது ஆற்றல் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு பெறுமதியான கலைப் படைப்பான மஞ்சத்தினைச் செய்வதற்கு நீங்கள் என்னுடன் ஒத்துழையுங்கள்" என்று அவர் அடிக்கடி என்னிடம் கூறுவார்கள்.

திருவிழா உபயகாரர்கள் கூறியபடி சகல உதவிகளையும் எமக்கு வழங்கினார்கள். எல்லோரது உதவிகளினாலும் அம்பிகையின் அளவற்ற பெரும் கருணையினாலும் 2000 ம் ஆண்டு உயர்திருவிழாவின் போது மஞ்சம் வெள்ளோட்டம் ஓடியது. அதே தினத்தில் அம்பாள் அலங்கார ரூபியாக மஞ்சத்தில் எழுந்தருளிய அருட் கோலக் காட்சி அனைவரது நெஞ்சங்களிலும் நிறைந்தது.

தாம் கூறிய வாக்கின் படி நடந்து எல்லாவகைப் பணிகளிலும் எம்முடன் இணைந்து நின்று எமக்கு உதவிய மஞ்சத்திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறுவதுடன் அவர்களின் இறைபணி மென்மேலும் சிறக்க அம்பாள் ஆண்டுதோறும் மஞ்சத்தில் எழுந்தருளி ஆசீர்வதிப்பாள் என நம்புகிறேன்.

நன்றி

மு. நா. நடராசா
முன்னாள் பொருளாளர்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்ச அமைப்பும் அதன் தத்துவம்

1975 ம் ஆண்டு நவம்பரில் அமரர் கந்தசாமி அவர்கள் எங்கள் ஆலயத்திற்கு அழகிய சித்திரத் தேர் ஒன்றை முருகப் பெருமானுக்குச் செய்வதற்கு உடன்பட்டுச் சிறந்த தொரு கலைப்படைப்பாக அதனை அமைத்து 1976ம் ஆண்டு யூனில் வெள்ளோட்டம் கண்டு பெருமைப்பட்டார். தொடர்ந்து கலையுலகமே கண்டு வியக்கும் வண்ணம் பல ஆலயங்களில் இருந்த மஞ்சங்கட்கு நாயகமான ஒரு மஞ்சத்தை அமரரைக் கொண்டு மஞ்ச உபயகாரர் அம்பாளுக்குச் செய்து 12.07.1981ல் வெள்ளோட்டம் கண்டு வீதி உலா வரச் செய்தார்கள். கண்டவர்கள் எல்லோரும் வியந்தார்கள். அன்னையின் கிழக்கு வாசல் கோபுரம்தான் வீதியுலா வருகின்றதா எனப் பிரமித்தார்கள். அப்படியான ஒரு கலைச் செல்வம் அந்த மஞ்சம். மேலும் புதிய முறையில் ஓர் சூரனையும், கலையம்சம் நிறைந்த பத்மாசனத்தையும் (தாமரை) அம்பாளுக்குச் செய்து கொடுத்துப் பெருமை தேடினார். அமரர் கந்தசாமி அவர்கள்.

03. 03 1986ல் நயினாதீவில் ஏற்பட்ட வன்செயலால் அம்பாளின் பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் தீக்கிரை ஆக்கப்பட்டன. இதன் பின் வன்செயல் நடைபெற்ற இடத்தைப் பார்த்த அறங்காவலர் சபை உறுப்பினர்களும் (இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட) 10ம் திருவிழா உபயகாரர்களும் மஞ்சத் திருப்பணிச்சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் அன்பர்களும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளானார்கள். என்ன செய்வது என்று தெரியாத நிலையில் நின்று யாவரும் தத்தளித்தார்கள். இனி அம்பாளின் மஞ்சம் எப்போது உருவாக்கப்பட்டு அந்த மஞ்சத்தில் அம்பாள் வீதி உலாவரும் காட்சியை எல்லோரும் காண்பது என்று கவலையுடன் இருந்தார்கள். அம்பிகையிடத்தில் பாரத்தைப் போட்டுவிட்டார்கள். இதில் சிற்பக்கலாமணி ஆ. சிவரெத்தினம் அவர்களால் செய்யப்பட்டு 01.07.1968ல் வெள்ளோட்டம் விடப்பட்ட பிள்ளையார் தேர், சிற்ப ஜோதி அமரர் கந்தசாமி அவர்களால் செய்யப்பட்ட சுப்பிரமணியர் தேர் என்பனவும் எமது இழப்புக்களில் மீளப்பெறமுடியாத கலைப் பொக்கிசங்களாகும் .

எப்போதெல்லாம் நயினாதீவிற்கு வருவாரோ அப்போதெல்லாம் அமரர் தன் கைவண்ணத்தில் உருவாகிய அந்த மஞ்ச நிழல்ப் படத்தினைப் பார்த்துப் பார்த்து கண்ணீர் விடுவார். இப்படியான ஒரு கலைச் செல்வத்தை இனிமேல் நான் செய்வேனா? என்று தன்னையே தான் கேட்பதுண்டு என்று கூறுவார். நீங்கள் செய்வீர்கள். அந்தத் திருப்பணி உங்களுக்குத் தான். உங்களைக் கொண்டு தான் நாம் செய்ய எண்ணியுள்ளோம் என்று அவருக்கு அடிக்கடி கூறி உள்ளோம். இந்த அடிப்படையில் தான் அமரர் எமது அழைப்பை ஏற்று 08.08.1998ல் வந்து உரையாடியதன் பின் 13.08.1998ல் வந்து மரங்களை எல்லாம் கணக்கு எடுத்துத் தேவைக்கு ஏற்றபடி அட்டிபோட்டு வைத்து விட்டுச் சென்றவர் மீண்டும் 22.08.1998ல் வந்து தனது நிலைப்பாட்டினைக் கூறி தன்னால் பொறுப்போற்று செய்ய முடியாமல் உள்ளத்தைக் கூறியதோடு அம்பாளின் வீதியில் நல்ல ஒரு மஞ்சம் ஓட வைப்பீர்கள் என்றார். உடனே உங்கள் கலைச் செல்வம் ஓடிய வீதியில் அதேபோன்ற மஞ்சம் கட்டாயம் 30.09.1999ன் முன் ஓடும் நீங்கள் மனம் தளர வேண்டாம் என்று கூறித் தகுந்த மரியாதையுடன் காளாஞ்சி கொடுத்து அவரை வழியனுப்பி வைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் திருவருளால் 1999ம் ஆண்டு தைப்பூச நன்நாளில் பூர்வாங்கமாக புதிய மஞ்சம் ஒன்று செய்வதற்கு அச்சுப் பார் வைத்தார்கள் அராலியூரைச் சேர்ந்த சிற்பாச்சாரி சி. அமரசிங்கம் அவர்கள் புதிய மஞ்சம் செய்யும் பொறுப்பை எடுத்தார். அம்பிகையின் திருவருளால் மன உறுதியுடன் தன்னுடைய கஷ்டங்களையும் பாராமல் மஞ்சத்தை முடிக்க வேண்டும் என எண்ணினார் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு அழகிய சித்திர வேலைப்பாடுடைய புதிய மஞ்சத்தில் அம்பாள் வீதி உலா வரவேண்டும், ஆன்ம கோடி மக்களுக்கு அருள் புரிய வேண்டும். என்ற நோக்கத்துடன் புதிய சிற்பசித்திர மஞ்சத்தை தன்னை அர்ப்பணித்து உருவாக்கினார்.

அம்பிகை புதிய மஞ்சத்தில் ஆரோகணித்து அடியார்கட்கு திருவருள் புரியும் நோக்கத்துடன் வசந்த மண்டபத்தில் சர்வாலங்கார பூஷணியாய் வீற்றிருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு விஷேட தீபாராதனைகள் நடைபெறும். அது இங்கு ஒரு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. அதன் பின் அருச்சனை நடைபெறும் எனது சிரேஷ்ட குமாரன் முத்துக்குமாரசாமிக்குரு அதற்குரிய நாமங்களை எல்லாம் ஒருவரியும் தவறாமலும் அக்ஷரங்கள் பிளையில்லாமலும் உச்சரிக்கும் போது ஒவ்வொரு நாமங்களுக்கும் ஒல்வொரு வில்வமாகவோ, புஷ்பமாகவோ அம்பாளின் திருவடித்தாமரைகளில் அர்ச்சிக்கும் போது அவளுடைய பாதார விந்தங்களைப் பார்ப்பதா, பூரணசந்திரன் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் திருமுக மண்டலத்தைப் பார்ப்பதா என்று மனம் தத்தழித்துவிடும். இருந்தும் ஒரு நாமத்திற்கு ஒரு வில்வமாகச் சாத்தும் என் பார்வை அம்பாளின் திருமுகத்தையே நோக்கும். பார்க்கும்போது அம்பிகையின் முகத்தின் ஜோதியானது எதுபோலுமெனில் அரும்பும் இழநகைபோற்றி புன்சிரிப்பு தோன்றுவது போல உதடுகளின் பிரகாசமானது ஏதோ ஒரு வசனம் சொல்வது போலத் தோன்றும்.

உள்ளத்தையே இறைவியின் திருவடித் தாமரையில் வைத்திட வேண்டும்.

பாதமலர் மீது போதமலர் தூவி
பாடுமலர் தோழத் தம்பிரானே!

என்கின்றார் அருணகிரியார். எந்த நா இறைவியைத் துதிக்கின்றதோ அதுவே நா. எந்தக் கண்கள் இறைவியைக் காண்கின்றனவோ அவையே கண்கள். எந்தக் கைகள் இறைவியைப் பூசிக்கின்றதோ அவையே கைகள். எந்த பக்தன் அம்பிகையை நினைக்கின்றானோ அவனே பக்தன்.

ஹரிஹர பிரம்மாதிகளால் கூட ஆராதிக்கத்தக்க உன்னை
வணங்கவோ துதிக்கவோ புண்யமில்லாதவரால் ஒருபோதும் முடியாது.

கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன்
நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம்
புயத்தில்; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே!புவி
ஏழையும் பூத்தவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய அறங்காவலர் சபையினரின் பெருமுயற்சியுடனும் மஞ்சத்திருவிழா நிர்வாக சபை உறுப்பினர்களின் பேராதரவுடனும் அடியார்களுடைய நிதி உதவியைக் கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய மஞ்சத்தில் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் எழுந்தருளி அடியார்களுக்கு காட்சி கொடுக்கும் போது சர்வவிக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுடன் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானுடன் உலகமாதாவாகிய அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் நடுவே வர, அடியார்கள் பக்திப் பரவசமாக மும்மூர்த்திகளையும் தங்கள் தோள்மீது தாங்கிவரும் போது, மனத்தை உருக்கும் வண்ணம் அம்பிகை புன்னகையோடு அருள் புரிந்து கொண்டு வரும் காட்சியில் அடியார்கள் மெய்மறந்து அம்பிகையைத் தியானித்து சூழ்ந்து வருவார்கள்.

மஞ்சத்தில் விநாயகப் பெருமானும், வள்ளிதேவயானை சமேத சுப்பிரமணியப் பெருமானும் இருமருங்கும் இருக்க நடுவே ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மஞ்சத்தின் இருதய பீடமாகிய தாமரைப் பூப் போன்ற மத்திய பீடத்தில் அமர்ந்திருப்பது "சம்ஸத ஹிருதயாம் போஜ நிலையாய நம" என்று அவளுடைய அர்ச்சனை நாமாவில் சொல்லப்படுகிறது. சகல ஜீவராசிகளின் இருதயத்தில் இருப்பதென்பது பொருள். அம்பாள் இருதயமாகிய பீடத்தில் அமர்ந்ததும் மஞ்சம் ஓட ஆரம்பித்துவிடும். அதில் இருந்து இறங்கியதும் மஞ்சம் அசைவற்று நின்றுவிடும்.

இப் பிரபஞ்சம் இறைவனால் அழகு பெறுகின்றது. இவ்வண்டத்தில் பலவிதமான சக்திகள் சேர்ந்து இதை காலம் கர்மா காரணம் என்ற அசைவுகளுள் அழைத்துச் செல்கின்றன. அந்த சக்திகள் பற்பல உயிர்கள் வாயிலாக நின்றும், சேர்ந்தும், எதிர்த்தும், அடங்கியும், தடுத்தும் செயற்படுவதான ஐந்து வல்லமைகளைக் கொண்டு இவ்வண்டத்தை இயக்குகின்றது.

மூலப் பொருளான இறைவன் இத்தனைக்கும் காரணமாகத்தான் விளங்கினாலும் தன்னிடத்துண்டான அனைத்துயிர்கள் இருதயத்தில் தன்னைத் தோற்றுவிக்கிறான். தாமே எல்லாமாகியும் எல்லாவற்றுள்ளும் தானாகியும் இருத்தலைக் காட்டும் லீலை அவன் செயல். உயர்ந்த ஜீவராசிகளான மனிதப்பிறவியினுள் வந்தவர். ஆண்டவன் வழிச் செல்ல இயலாதவர்களாயினும் ஆண்டவனைத் தன்வழி அழைக்கச் சித்தங் கொண்டு நிற்பதைக் காட்டும் பக்திக்கு வசப்படுவன் இறைவன். அப் பரம்பொருளுக்கு இவன் அவன் என்ற பேதமில்லை. ஆயினும் அவன் முன்னிலையில் ஆவரவர் ஆணவப் பித்து அக்கணத்தில் தலைக்கேறி விடுகின்றது. இதனை அகற்ற உள்ளமும் உடலும் ஆண்டவன் நினைவில் ஒன்றாகும் போது சரியை, கிரியை முதலிய பூசனைகள் அல்லது உபாசனா வழிமுறைகள் காட்டுகின்றன. அத்தனையும் தன்னிடத்தே கொண்டுள்ளது இம்மஞ்சத் திருவிழா வைபவம்.

மஞ்சத்தை இழுக்கும் கயிறு பாசமெனக் கூறப்படும். பாசம் கடக்க பாசம் துணைக் கொள்வோம். பாசமென்பது மூவினைக் கயிறு. பாசமென்பது ஆண்டவனிடம் காட்டும் அன்புநெறி. அன்பால் தம்முடைய மூவினைக் கட்டுக்களை நீக்கி, பக்தியின் பரவசத்தால் நம்முடல் வலிமையும் உள்ளத்தின் ஆர்வமும் கொண்டு இறைவனை நமது பக்கம் அழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடம் அவனருள் தானே முன்னோடி வருவது திண்ணம். இப்பிரமாண்டமான மஞ்சம் சரீரத்தின் அமைப்பாகும். சிம்மாசனமாகிய பீடம் நமது இருதய கமலத்தைக் குறிக்கிறது. அங்குதான் இறைவனை அமரச் செய்கிறோம். இதன் காரணம் யாக்கையோடு அமைந்த வாழ்கைத்தேர் சிறப்பாக ஓடுவதற்கு இதயத்தில் இறைவனை இருத்த வேண்டுமென்பதாகும். இறைவனே யாக்கையை இயக்கும் உயிர், இறைவி மஞ்சத்தில் அமர்ந்ததும் தான் மஞ்சம் ஓட ஆரம்பிக்கிறது. இறைவி மஞ்சத்தில் இருந்து இறங்கியதும் ஓடம் நின்றுவிடுகிறது. நமது யாக்கையின் உயிர் இயக்கமும் அத்தகையதே.

நான்கு புருஷார்த்தங்களான தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற இவைகள் தேரின் சக்கரங்கள் (சில்லுகள்) பக்தி என்பது கயிறு, உள்ளும் புறமும் அவனே வியாபித்துள்ளான் உள்ளிருப்பவனை புறத்திருப்பவன் சக்தியால் இழுத்து அழைத்துக் கொள்வது போல்வது மஞ்சம் இழுக்கும் செயலாம்.

மஞ்சத்தின் மேல் அண்டம் நமது உன்னத இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் குறிப்பதாகும். மனித இலட்சியங்கள் பல்வகைப்பட்டவை என்பதைக் காட்டவே பல சித்திரவர்ணங்களான ஆடைகளைக் கொண்டு மஞ்சத்தின் மேலண்டம் அலங்கரிக்கப்படுகிறது. இலட்சியங்கள் எப்படியிருந்த போதிலும் அவை அனைத்தும் கலசமாகிய முடியை மேல் நோக்கி ஒன்று சேருகின்றன. கலசம் வாழ்க்கையின் பெறுபேறான ஜன்ம சாபல்யத்தைக் குறிக்கும். வாழ்க்கையின் இலட்சியங்கள் ஆகியன வேறுபட்டனவாகவும் மாறுபட்டனவாகவும் இருந்த போதிலும் அவை அனைத்தும் ஜன்ம சாபல்ய மென்ற ஒரேபேற்றினை நோக்கி குவிதல் அவசியமென்பதை மேலண்டமும் கலசமும் விளக்குகின்றன. அப்படிக் குவியுமானால் ஆத்மசாந்தி என்ற நிழல் வாழ்க்கையில் கிட்டுகிறது என்பதை கலசத்து மேலேயுள்ள குடை விளக்குகிறது.

மஞ்சத்தின் வேகம், காலத்தின் வேகம், அதைக்கட்டுப் படுத்த வேண்டியது அவசியம். மஞ்சத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நேர்வழியில் செலுத்துவதே முறை. இல்லாவிடில் மஞ்சம் வழிதப்பிச் செல்லும், மஞ்சம் விவேகமென்னும் மிண்டிமரம் போட்டுத் தடுத்து நேராக இழுக்க வேண்டும். இறைவனை நம்மிடம் வராதபடி தூரத்தே செலுத்தும் ஐம்புலன்களைத் தடுத்து மனதை பத்தியினால் நேர்ப்படுத்த மிண்டிமரம் உபயோகமாகிறது. அவனருனால் அதைப் பெறுகிறோம். நாம் மஞ்சத்தில் வீற்றிருக்கும் இறைவனை தரிசிப்பது பாபவிமோசனமாகும்.

அம்பிகையினிடத்து நீங்காத அன்பு உடையவர்களாய் அவளை மெய்யன்போடு நினைத்து வழிபட்டு அவளருளைப் பெற நாம் முயலவேண்டும். உன்னை நெருங்க எந்தத் தகுதியும் இல்லை என்று பயந்து வெகுதூரத்தில் நிற்கிறேன். தீனனான என்னிடத்தில் தாயே நீ கருணை காட்டு. அதனால் உனக்கு ஒரு குறைவும் ஏற்படாது. ஆனால் எனக்குப் பெரிய லாபம் கிடைக்கும். சந்திரன் தன் ஒளியைப் பரப்பும்போது அரண்மனை என்றோ குடிசை என்றோ பார்ப்பதில்லை. எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி பிரகாசிக்கிறது. அதே போல நீயும் என்னை எடைபோடாமல் கருணையால் காத்தருள வேண்டும் என்கிறார் சங்கரர். ஆகவே நாமும் அப்படியே பிராத்தித்து அம்பிகையின் கடைக்கண் அருளைக் கோருவோம். அருளில்லா ஆன்மா தாயில்லாக் குழந்தை போலாகும் என்று ராமலிங்க சுவாமிகள் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் கடைக்கண் பார்வை ஒரு க்ஷணம் நம்மேல் விழுந்தால் போதும் ஸ்ரீவேங்கடாத்ரி என்பவர் தன்கண் பார்வை இழந்த போது லக்ஷ்மீ ஸகஸ்ரம் என்ற பெயரில் ஆயிரம் சுலோகங்களை இயற்றி அம்பிகையை ஸ்தோத்திரம் செய்தார். அதனால் இழந்த கண் பார்வையைப் பெற்றார் என்பதும், அம்பிகையின் அருள் இருந்தால் ஊமை பேச மட்டுமா செய்வான் பெரும் கவியாகவும் ஆகமாட்டானா? மகாகவி காளிதாசன் கவிஞனாகிய செய்தி அவ்வாறன்றோ இதைக் சங்கராச்சாரியார் சௌந்தர்ய லகரியில் குறிப்பிடுகிறார்.

நின்னருள் பெற்றிலாதார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்வி கேள்வி படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாப் பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம் அவர்கள் பேய் பிணத்தோடொப்பார்.

என்னதான் கற்றாலென் எப்பொருளும் பெற்றாலென்
உன்னை யறியாதா ருய்வரோ பூரணமே!

சிவாகமகலாநிதி
சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள்
விஷேட குருமணி
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

ஒரு தாயின் குணநலப்பண்புகள் இறைவனிடமிருந்தே பெறப்பட்டவை. குழந்தைப் பருவத்தில் எம்மைப் போஷித்து, அப்போதைய தேவைகளை எல்லாம் அளித்தவள் எமது அன்னையே. இறைவனும் எமக்காக, சகலதையும் அளித்துள்ளார். நாம் பிறந்த போது பிராணவாயுவை கொண்டு வந்தவர்களல்ல! இறைவனைப் போலவே அன்னையும் எமது தவறுகளை மன்னிக்கும் சுபாவம் கொண்டவள். அவளே எங்களின் முதலாவது குரு.

★ ★ ★

சிறந்த சிந்தனையும் உயர்ந்த பண்புகளும் ஒருவனுக்குப் பக்க பலமாயிருக்குமெனில், அவன் சூழ்நிலைகளின் எஜமானன் ஆவான். அப்படியில்லையெனில், அவன் சூழ்நிலைகளின் கைதியாக வேண்டியதே. வெற்றியை அல்லது தோல்வியைத் தேர்ந்தெடுப்பது எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

★ ★ ★

நேர்மை வலிமை மிக்கது. நேர்மையானதையே செய்தால், எவருக்கும் அஞ்ச வேண்டியது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வரலாறும்
அம்பிகையின் மகத்துவமும்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்துக்கு அருகே உள்ள சப்த தீவுகளில் நடுநாயகமாகத் திகழ்வது நயினாதீவாகும். பாரம்பரியமான வரலாற்றைக் கொண்ட இத்தீவில், அறுபத்து நான்கு சத்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு நாகராஜேஸ்வரி, நாகேஸ்வரி, நாகபூஷணி என்ற திருநாமங்களுடன் அம்பிகை அருளாட்சி செய்கின்றாள்.

இப்புவனேஸ்வரி பீடத்தின் அம்பிகைக்குப் பூக்கொண்டு நாகத்தால் பூசிக்கப்பட்டதாலும் நாகர்களால் வழிபடப் பெற்றதாலும் நாகபூஷணி, நாகேஸ்வரி என்ற திருநாமங்கள் வழங்கப்படலாயிற்று. இதனைத்தெளிவுபடுத்தும் வரலாறும் உண்டு. நயினாதீவுக்கு வடக்கேயுள்ள அனலைதீவின் ஒரு பகுதியான புளியந்தீவில் இருந்து நாள்தோறும் பூக்கொண்டு வந்து, நாகம் ஒன்று அம்பிகையை வழிபட்டு வந்தது. ஒருநாள் கடல் நடுவே வரும்வழியில், கருடன் ஒன்று நாகத்தினைக் கண்டு அதனைக் கொல்ல முயன்றது. நாகம் கடல் நடுவே உள்ள கல்லொன்றில் சுற்றிக் கொண்டதும், எதிரிலுள்ள கல்லொன்றில் கருடன் அமர்ந்து பாம்பினைக் கொல்வதற்கு எதிர்பார்த்திருந்தது. அக்கடல் வழியே மரக்கலத்தில் பண்டங்களை ஏற்றி வந்த வணிகன் ஒருவன் இதனைக் கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டு, அதனைக் கொல்ல வேண்டாமெனக் கருடனிடம் கேட்டுக் கொண்டான். அவ்வேனையில் உனது செல்வம் அனைத்தையும் கொண்டு, நாகேஸ்வரிக்குக் கோயில் கட்டுவதானால் நான் விலகிச் செல்கின்றேன் என்ற வாக்குக் கேட்டது. வணிகன் அதனை ஏற்று, அவ்வாறு செய்வாதாக உறுதி அளிக்கவே, கருடன் நாகத்தை விட்டு விலகிச் சென்றது. நாகமும் அம்பிகையை பூசிக்கச் சென்றது. அன்றைய தினம் இரவு வணிகன் வீட்டுச் சயன அறையில் நாகரத்தினக் கல் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்ட வணிகன், அன்னையின் திருவருளாகக் கருதி, அதனைக் கொண்டே, அப்பிகையின் ஆலயத்தை அழகுற அமைத்ததாகவும் நயினாப்பட்டர் என்ற பூசகரைப் பூசைக்கு அமர்த்தியதாகவும் வரலாறு உண்டு. இவ்விரு கற்களும் ஆலயத்தின் வடக்கேயுள்ள கடல் நடுவே சரித்திரச் சான்றுகளாக இன்றும் உள்ளன.

மணிமேகலைக் காப்பியத்திற் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் மணிபல்லவம் என்னும் தீவு பற்றிய செய்தி கூறப்படுகின்றது. இம்மணிபல்லவமே நயினாதீவு என்பது ஆய்வாளர்கள் பலரின் முடிவு. விலைமதித்தற்கரிய மாணிக்கம் பதித்த அரியணை ஒன்று, தேவ உலக வேந்தனாகிய இந்திரனால் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்பெறுமதி வாய்ந்த அரியணைக்காக நாக மன்னர்கள் இருவர் போரிட்டதாகவும், இப்போர் நடந்து கொண்டிருந்த வேளையில் புத்தர் பிரான் வந்து, இவ்வரியணை இந்திரனாற் புவனேஸ்வரி அம்பாளுக்கெனப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்ற உண்மையை எடுத்துரைத்து, அன்னைக்குரிய இவ்வரியணையை வணங்கிச் செல்லுமாறு வேண்டி, அவர்களைச் சமாதானப்படுத்தியதாகவும், அவர்கள் அவ்வாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டுப் பகைநீங்கிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. புத்தபெருமான் இலங்கைக்கு மூன்று முறை வந்ததாகவும், மூன்றாவது தடவையே இம்மணிபல்லவத்துக்கு வருகை தந்ததாகவும், அவரின் வருகைக்கு முன்பே இந்திரனால் அமைக்கப்பட்ட பீடமான புவனேஸ்வரி பீடம் இங்கு அமைந்திருந்ததாகவும் கிடைக்கும் செய்திகளில் இருந்து தெரிகின்றது. இப்பீடத்தினைத் தேவர் கோனாகிய இந்திரன் வழிபட்டான் என்பது ஆய்வாளர் கூறும் செய்தியாகும். "பெரியவன் தோன்றா முன்னர் இப்பீடிகை கரியவன் இட்ட காரணத்தானும்" என்னும் மணிமேகலைக் காப்பிய வரிகளால் இதை உணரலாம். (மணிமேகலை 25, 54–55) புத்தபெருமான் வருகையை நினைவுகூரும் வகையில் தருமபீடிகை அமைந்திருந்ததாகவும் அதனை மணிமேகலை வழிபட்டதாகவும், மணிமேகலைக் காப்பியத்தால் அறியும் செய்தியாகவுள்ளது.

சாவக நாட்டில் மழை வளம் சுருங்கி அங்குள்ளோர் உணவு கிட்டாது வருந்து வாராயினர். இதனை அறிந்த ஆபுத்திரன் சாவக நாடு செல்லும் கப்பல் ஒன்றிலே அக்கப்பலில் உள்ளோர் வேண்டியபடி, தான்வைத்திருந்த அமுதசுரபியோடு ஏறி அங்குள்ளவர்களின் பசி போக்கிடச் செல்லலானான். இந்திரனின் சூழ்ச்சியாற் புயல் வீசிற்று. அப்புயல் காரணமாகக் கப்பல் மணிபல்லவத்திற் கரை ஒதுங்கியது. புயல் அடங்கியதும் கப்பலில் உள்ளோரும் மாலுமிகளும், ஆபுத்திரன் ஏற்கனவே கப்பலில் ஏறிவிட்டான் என்று எண்ணித் தமது பயணத்தைச் சாவகம் நோக்கி தொடர்ந்தனர். கப்பலில் ஏறத்தவறி தன்னந் தனியனாய் விட்ட ஆபுத்திரன் தன் பணி நிறைவேற முடியாததால் வருந்தி இம்மணிபல்லவத்தில் தான் உறங்கிய இடத்தின் அருகே உள்ள கோமுகிப் பொய்கையில் அமுதசுரபியை இட்டு, தான் உண்ணா நோன்பு நோற்று மரணம் அடைந்தான். இவ்வரலாறும் மணிமேகலைக் காப்பியத்தால் நாம் அறியக் கூடிய செய்தியாக உள்ளது.

நாயினாப்பட்டர் என்பவர் பூசகராக இருந்த காரணத்தால் நாயினாதீவு எனப் பெயர்வரக் காரணமாயிற்று என்பர். நாகபூசணி அம்மன் ஆலயக் கருவறையிற், சுயம்பு மூர்த்தமாகத் தோன்றிய ஐந்து தலை நாகமும், அம்பாளும் இணைந்த மூர்த்தம் உள்ளது. இது பதினான்காயிரம் ஆண்டு பழமைவாய்ந்ததென்றும், நாக வழிபாட்டோடு தொடர்புடைய மிகப் பழமையான சுயம்பு மூர்த்தம் எனவும், சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் எம். நரசிம்மன் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். இந்தியாவிலும் நாக வழிபாட்டுக்குச் சிறப்புப் பெற்ற இவ்வாறான புராதன கோயிலைக் காண்பது அரிது. தூயதும், கலப்பற்றதுமான நாக வழிபாட்டின் பண்பினை, நயினாதீவிற் காணலாம். இலங்கை, இந்தியா போன்ற இடங்களிலோ வேறெங்குமோ பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாகவும் நாக வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாகவும் இது இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நாகத்துவீபம், நாகதீபம் எனப் பல பெயர்களால் இத்தீவு வழங்கப்படுகின்றது என்பதை வரலாறுகள் மூலம் அறிகின்றோம். இந் நாக வழிபாடும் நயினாதீவுக்கு இவ்வாறான பெயர் வரக் காரணமாக இருந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர் வருகையால் மத வழிபாட்டுத் தலங்கள் பாதிக்கப்பட்டபோது இவ்வாலயமும் பாதிக்கப்பட்டு, இங்கு இருந்ததாகக் கூறப்படும் செப்புத் தேர், பவளத் தேர் என்பன கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகவும், ஆலயத்தை இடித்து, அதிலிருந்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டே ஊர்காவற்றுறையில் உள்ள கோட்டையைக் கட்டியதாகவும் வரலாறுகள் உண்டு. இவ்வாலயத்தில் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்துத் தமிழ் கல்வெட்டுக்கள் சரித்திர ஆதாரங்களாக இன்றும் உள்ளன.

அலைகடலைத் தாண்டி அடியார்கள் கரையேறும் போது அம்பிகையின் அழகுமிகுந்த கோபுரம் கண்களைக் கவர, ஆலயத்தின் இயற்கைச் சூழல் சிந்தையைக் குளிரச் செய்ய, அம்பிகையின் காண்டாமணி ஓசை அடியார்களை வரவேற்று நிற்கும் அற்புத அமைப்பைக் கொண்டதே இத்தலம். நெய்தலும் மருதமும் கலந்த இயற்கைச் சூழலில் விளங்கும் நயினையம்பதி. இயற்கை எழிலோடு தெய்வீகப் பொலிவும் பொருந்தியது. ஆலயத்தைச் சூழ்ந்து எங்கணும் வேப்ப மரத் தோப்புக்கள் நிழல் பரப்பி நிற்க கடலில் இருந்து குளிர்ச்சியுடன் எழுந்து வரும் காற்று இம்மர நிழலில் கலந்து வெப்பத்தினைப் போக்கிக் குளிர்ச்சியை நல்கிட, அடியார்கள் இவ்வியற்கையான தெய்வீகச் சூழலில் தம்மை மறந்து நிற்க, அழகுறு ஆலயத்தில் கம்பீரமாக வீற்றிருக்கின்றாள் அன்னை நாகபூஷணி. இவ்ஆலயத்தின் தலவிருட்சம் வன்னிமரமாகும். ஆலயத்தின் பிரதான கோபுரத்துக்குத் தென்புறமாக கோபுரத்தை அண்டி இத்தலவிருட்சம் எழில் பெற்றுக் காணப்படுகின்றது. நயினாதீவுச் சுவாமிகள் எனப் போற்றப்படும், ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளால் உருவாக்கப்பட்டிருந்த தீர்த்தக் கேணியே, இவ்வாலயத்தின் புண்ணிய தீர்த்தமாகும்.

1960 ஆம் ஆண்டுவரை இவ்வாலயத்தில் பத்துத் திருவிழாக்களே நடைபெற்றன. பின்னர் திருவிழாக்காலம் ஆனிப் பூரணை நாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு, பதினைந்து தினங்களாக மாற்றப்பட்டது. மகோற்சவ காலத்தில் அடியார்கள் பெருந்திரளாக வந்தாலும், சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்று தினங்களும் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் கூடுவது தொன்று தொட்டு இருந்து வரும் நிகழ்வாகும். தீர்த்தம் முடிந்த மறுநாள் பூரணை நிலவெறிப்ப கடல் நடுவே தெப்பத்தில் அம்பிகை தோன்றி, அடியார்கள் தாண்டி வந்த அலைகடலைத் தன்திருக்கண் நோக்காற் பார்த்து ஆனந்தமடைந்து திரும்பும் தெப்பத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இத்திருவிழாவைப் பூங்காவனத் திருவிழா என்றும் கூறுவர். இவ்வாலயத் திருவிழாக்களிற் கொடியேற்றம், கைலைக் காட்சித் திருவிழா, மஞ்சத் திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழா, தெப்பத் திருவிழா என்பன சிறப்புப் பெற்றிப்பதோடு, இத்திருவிழா நாட்களே அடியார்களும் பெருந்திரளாகக் கூடும் நாட்களாகவும் இருக்கும்.

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பல மணித்தியாலங்களைச் செலவழித்தே நீண்ட பெரும் கடற்பரப்பைத் தாண்டி அடியார்கள் அன்னையைத் தரிசிக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் புறப்பட்டால் குறிகாட்டுவான் வரை வாகனத்தில் வந்து 10–15 நிமிட கடற் பிரயாணத்துடன் நயினாதீவுக்கு வந்து சேர்ந்து விடலாம். அன்றைய தினமே, அடியார்கள் தம் வழிபாட்டை முடித்துக் கொண்டு திருப்பிச் செல்லக் கூடியதாகவிருக்கும். அந்தளவுக்குப் பிரயாணம் சுருங்கி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்கிச் செல்வதற்கு ஆலய வடக்கு வீதியில் இறை பயணிகள் இல்லம் உண்டு. அவ்வில்லத்தில் தினசரி அன்னதானமும் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் நயினாதீவைப் பொறுத்தவரையில் காலத்தின் தேவையாக இருப்பதை உணர்ந்து அறங்காவலர் சபையினரால் இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனாற் சாதாரண நாட்களிலும் தினந்தோறும், அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. தினசரி அன்னதானத் திருப்பணியை சிறப்பாக நடாத்தவும், தினம் தோறும் வருகைதரும் பெருந்திரளான அடியார்களின் நலன் கருதியும் "ஸ்ரீ அன்னபூரணி" "ஸ்ரீபுவனேஸ்வரி" என்ற பெயர் இட்டு இரண்டு புதிய திருமண்டபங்கள் இவ்வாண்டு தைப்பூசத் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் ஆலயத்தில் திருமணம் செய்ய வேண்டுமென நேர்த்தி வைத்தவர்களுக்காகக் கல்யாண மண்டபமும் இறை பயணிகள் இல்லத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய தரிசனத்துக்குகாக வருகை தரும் அடியார்கள் எல்லோருக்கும் தினம் தோறும் அன்னதானம் வழங்குகின்ற ஆலயம் என்ற பெருமைக்குரியது இத்தலம். நீண்ட துரங்களில் இருந்து அதிகாலையில் புறப்பட்டு அம்பிகையை தரிசிப்பதற்காக கடல் கடந்து வந்து கொண்டிருக்கும் அடியார்கள் தங்களின் உளப்பசியையும் உடற்பசியையும் தீர்த்துக் கொண்டு மனநிறைவுடன் திரும்பிச் செல்லும் சிறப்புக்குரியது இப் புண்ணியபூமி. பல துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து கொண்டு வரும் அடியார்கள் அம்பாளை தரிசனம் செய்ததும் தங்கள் பாரங்களை எல்லாம் இறக்கி விட்டு அம்பிகையின் அருளையும் அமுதத்தையும் பெற்று திரும்பிச் செல்லும் போது உண்மையிலேயே நாம் பூரிப்படைகின்றோம். காலத்தின் கட்டாய தேவையாக இவ்வன்னதானப் பணி இருப்பதை உணர்ந்தே ஆலய அறங்காவலர் சபையினர் இக்கைங்கரியத்தை 1998ல் நடந்து முடிந்த கும்பாபிஷேக நாளில் இருந்து முன்னெடுத்துச் செய்து வருகின்றனர். வேறெந்த ஆலயத்திலும் இல்லாத இத்தெய்வீகப் பணி இங்கு சிறப்பு பெறுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. பசிப்பிணி போக்கிட சாவக நாடு நோக்கி புறப்பட்ட ஆபுத்திரன் இம்மணிபல்லவத்தில் தங்கியதும், கோமுகிப் பொய்கையில் தான் கொண்டு வந்த அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தை இட்டுச் சென்றதும், வரலாற்று உண்மை. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாகிய அட்சய பாத்திரம் என்ன நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டு இப்புண்ணிய பூமியில் சங்கமமாகி உள்ளதோ அந்த தூயநோக்கம் அன்னபூரணியாகிய அம்பிகையின் திருவருளால் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது என்றே கொள்ள வேண்டும். இப்புண்ணிய கைங்கரியம் தொடரவும் வளரவும் அம்பிகையின் திருவருளும் அன்புள்ளங்களின் ஆதரவும் என்றும் கிடைக்குமென நம்புவோமாக.

இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களின் சித்திரத் தேர்களிற் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சிறந்த நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்பத் தேர், இவ்வாலயத்திலேயே உண்டு. இத்தேருடன் விநாயகப் பெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் அழகுறு திருத்தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அம்பாளுக்கு அழகிய சித்திர வேலைப்பாடுடன் கூடிய அழகிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998ல் நடைபெற்று முடிந்த பாரிய திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து அவ்வாண்டிலேயே விநாயகப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1999ல் முருகப்பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 2000ம் ஆண்டில் அம்பிகைக்கு அழகிய திருமஞ்சம் அமைக்கப்பட்டு வீதியுலா வரலாயிற்று. 2001ம் ஆண்டில் தினசரி அன்னதானத் திருப்பணியை சிறப்பாக நடாத்தவும், தினம்தோறும் வருகைதரும் பெருந்திரளான அடியார்களின் நலன்கருதியும், ஸ்ரீபுவனேஸ்வரி, ஸ்ரீ அன்னபூரணி என்ற பெயரில் இரண்டு புதிய பெரிய திருமண்டபங்கள் அமைக்கப்பட்டு தைப்பூசத் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தான் கர்த்தாவாக இருந்து கொண்டு பொருத்தமானவர்களை தன்பால் ஈர்த்து அவர்களை கருவியாக்கி இப்பாரிய பணிகளை செய்வித்துக் கொண்டிருக்கும் அம்பிகையின் தெய்வீகத் திருவருளை எண்ணும் போது மெய்சிலிர்க்கின்றது. உளம் பூரிக்கின்றது.

அம்பிகையின் மகத்துவம்

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து " என்பது மணிவாசகரின் திருவாசகம். அன்பு, பொறுமை, இரக்கம், மன்னிக்கும் சுபாவம் என்பனவற்றைத் தாய்மையில் நாம் தெளிவாகக் காண்கிறோம். ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத பரம் பொருளுக்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பல்வேறு வடிவங்களில் நாம் வழிபாடு செய்கின்றோம். இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உளங்கலந்து உணர்வுபூர்வமான உறவை ஏற்படுத்தி வழிபட வாய்த்த நெறி, தாயாகக் கருதி வழிபாடு செய்யும் நெறியேயாகும்.

தடித்ததோர் மகனை தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பாள், என்பதும்
பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ, என்பதும்

தாய்க்கேயுரியதான ஒரு தனித்துவமான அரவணைக்கும் பண்பைத் தெளிவாக்கி நிற்கும் பாடலடிகளாகும். இதனாலேயே சிவிகை ஏற்றுவித்த சிவனை நோக்கிப் பாடிய மணிவாசகர் தாய்க்குரியதான இரக்கப் பண்பை இறைவனிடம் கண்டு இறைவனைத் தாயாக்கி " அம்மை எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே" என்று தாயன்பை மிக அழகாக எடுத்துக் கூறினார்.

அம்பிகை மும் மூர்த்திகளுக்கும் மூத்தவள். அதனாலேதான், திரிபுரா என்றும், மகா திரிபுரசுந்தரி என்றும் போற்றப்படுகின்றாள். "பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே" என அபிராமிப்பட்டர் கூறியவாறு எல்லாவற்றிற்கும் "மூல முதலாய்" நின்று உலகைத் தோற்றுவித்துக் காத்து நிற்பவள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாயன்பு மிக்க சக்தியின் அருட்பொலிவு பெற்ற இடங்களே சக்தி பீடங்களாகக் கருதப்படுகின்றன. உலகுயிர்கள் உய்யும் வண்ணம் எம்பெருமானாகிய இறைவன் தமது சத்தியினை பதித்தருளிய இடங்கள் அறுபத்திநான்காகும். இவையே சத்திபீடங்கள் எனப்படும். மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், நாகபட்டினத்தில் நீலாயதாட்சியாகவும் உறையும் மாபெரும் சக்தியே, புவனேஸ்வரி பீடமாகிய இந்நயினையில் நாகபூஷணியாக உறைகின்றாள்.

இயற்கை எழில் மிகுந்த இடங்களே, இறைவன் விரும்பி உறையுமிடங்கள். நதிக்கரை, கடற்கரை, சோலை, மலையடிவாரம் முதலான இடங்களே எழில் மிகுந்தவை. நயினை நாகபூசணி அம்பிகையும் நீலத்திரைக் கடல் ஓரத்தில் அமர்ந்து நித்தமும் நாடிவரும் அடியார்களுக்கு நித்திய லெட்சுமியாகக் கோயில் கொண்டு, நல் அருள்புரியும் வண்ணம் எழுந்தருளி இருக்கின்றாள். தலத்தைச் சூழ்ந்துள்ள விருட்சங்களிலிருந்து தலமூர்த்தியை அறிந்து கொள்ளலாம் என்பர். இங்கே வேப்ப மரங்கள் தோப்பாகச் சூழ்ந்து எழிலுற வளர்ந்து நின்று இறைவியின் இருப்பிடம் இதுவென எடுத்துக் காட்டி நிற்கின்றன. பத்தினித் தெய்வத்திற்குரிய மரம் வேப்ப மரமாகப் பரவலாக எல்லோராலும் போற்றப்பட்டு கருதப்படும் வழக்கம் உண்டு.

சிற்பவடிவாகவோ செதுக்கியோ செப்புருவாய் வார்த்தெடுத்தே பிரதிஷ்டை செய்யப்படாது தாமாகவே தேன்றி வழிபாட்டிற்கு இடமாகும் தெய்வ உருவங்கள் சுயம்பு மூர்த்தம் என வழங்கப்படும். நயினை ஆலயத்தின் மூலக்கருவறையில் ஐந்து தலை நாகமும், அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது. இவ்விக்கிரகம் பல்லாயிரம் ஆண்டு பழமைவாய்ந்தது. நாகவழிபாட்டில் தொடங்கி காலப்போக்கில் நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து அவ்வழிபாட்டின் அறாத் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

இம்மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும் இலங்கை எங்கணும் உள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழமைவாய்ந்தது நயினை நாகபூஷணி ஆலயமே என்பது ஐயமின்றி பெறப்படுகின்றது. ஆரம்பத்தில் நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கொள்ளலே பொருத்தமாக தெரிகின்றது. பிறிதொரு காலத்தில் வட இலங்கை முழுவதுமே நாகதீவு என்று அழைக்கப்படலாயிற்று. பின்னர் இலங்கை முழுவதற்கும் இப்பெயரே இடப்பட்டு விட்டது.

மூலமூர்த்தியாக அமைந்திருக்கும் வடிவம் குண்டலினி சத்தியை பிரதிபலிப்பதாய் இருப்பதால் சத்தியின் அம்சம் இன்னுமொருபடி பிரபாகம் பெற்றிப்பதை அறிந்து பாடிப் பணிய வேண்டி உள்ளது. "பணிபதி வேஷ்டித கோபித லிங்கம்" என்ற ஆதிசங்கரரின் கருத்து பாம்பின் படத்தினால் இயற்கையாக சுற்றப்பட்ட லிங்கத்தை குறிக்கின்றது. இது போன்ற அமைப்பு இவ்வாலயத்திலன்றி வேறெங்கும் இல்லை என்றே கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சியாளர் நோக்கிற்கு இவ்வாலயம் மிகமிகத் தொன்மையானது. இதனை ஆராய்ந்த எம். நரசிம்மன் என்ற ஆராச்சியாளர் இதன் தொன்மையை வியந்து கூறினார்கள். நாகவழிபாடு தொன்மையானது. நாகபூசணியாக நாகதம்பிரானாகப் பல இடங்களில் இவ் வழிபாடு நடைபெறுகின்றது. சர்ப்பம் சக்தியின் சின்னம் எனவும் கருதப்படுகின்றது. அம்பிகை நாகவடிவிற் சென்று அன்பர்களுக்கு அருள்புரிந்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகள் பலவுள.

அம்பிகை குண்டலினி சக்தியாகவும், அருட் சக்தியாகவும், சுயம்பு மூர்த்தமாகவும் இங்கு எழுந்தருளியுள்ளாள். எமது உடம்பின் மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியை விளிப்புறச் செய்தவர்களே மகான்கள் ஆவர். அவர்கள் ஆன்மீக ரீதியில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்துள்ளார்கள். இராமபிரான் துர்க்கையைப் பூசித்ததாகவும் கண்ணபிரான் கார்த்தியாயினியை வழிபட்டதாகவும், ஆதிசங்கரர் சாரதையைப் பூசித்ததாகவும் வரலாறு உண்டு. இராமகிருஷ்ணர் காளியைப் பூசித்துப் பெரும்பேறு பெற்றது போலவே அபிராமிப் பட்டரும் சக்தி வழிபாட்டாற் பேறு பெற்றார். இறைவனைத் தாயாகவும் உலக நாயகியாகவும் போற்றி வணங்குதல் நமது சமயத்தின் சிறப்பு அம்சமாகும். ஒரு குழந்தையானது தனது தாயிடம் எத்தகைய நெருக்கத்தை உணருமோ அத்தகைய நெருக்கத்தை இறைவனிடமும் உணரவே அவனைத் தாயாக வழிபடுகின்றோம். அத்தகைய நெருக்கத்தை அவளிடம் உணர்ந்து விட்டால் எதையும் அவளிடமிருந்து கேட்டுப் பெறுவது சுலபம்.

யாவராலும் மேலானதாகக் கருதப்பட்ட சக்திவழிபாடு இன்றைய உலகில் மிக இன்றியமையாத வழிபாடாகவுள்ளது. சக்தியை மூன்று விதமாக வழிபடலாம். மந்திரஜெபம், ஸ்ரீசக்கரம், குண்டலினி யோக சாதனை. மந்திரங்கள் இறைவியின் ஒலிவடிவம். இதனாற் தான் இறைவியை நாதரூபி, நாதாந்த சக்தி, என அழைக்கின்றனர். இந்த மந்திரஜெபம் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தினந்தோறும் முறையாக நடைபெறுகின்றது. நவராத்திரி தினங்களில் வேறு எந்தத் தலத்திலும் இல்லாத முறையில் இங்கு அம்பிகையானவள் மந்திரங்களால் துதிக்கப்பட்டுப் பிரார்த்திக்கப் படுகின்றாள்.

அடுத்ததாக ஸ்ரீசக்கரம் தேவியின் வரிவடிவம் எனப்படுகின்றது. ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் இந்த வரிவடிவம் வரையப்பட்டு தகடு வைக்கப்பட்டு வில்வம் முதலியவற்றைச் சாத்தி விரிவான பூசை நடைபெறுகின்றது. இதனை ஸ்ரீசக்கர பூசை என்பர்.

குண்டலினி சக்தி புறத்தே நாகவழிபாடாக வழிபடப்படுகின்றது. அம்பிகையின் வணக்கத்துக்குரிய மூன்று வழிபாட்டு முறைகளும் இங்கே நடைபெறுகின்றன. இது மிகவும் போற்றத்தக்க ஒன்றாகும்.

புவனங்கள் எல்லாம் கடந்து நிற்கின்ற எம்பெருமான் தன் திருவுள்ளத்தில் அம்பிகையின் வடிவை அழகொழுகும்படி மெல்ல மெல்ல எழுதி முழுவடிவத்தையும் அங்கே உருவகித்து அதையே தனது உள்ளத்திரையிற் பார்த்த வண்ணம் தவமிருக்கின்றான். அப்படி இருக்கும் போது அவனுள்ளத்தில் உயிருள்ள சித்திரமாக அம்பிகை நிற்கின்றாள். இறைவன் புறத்தோற்றத்தே எல்லாம் அடக்கிய யோகியாக இருந்தாலும் அம்பிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்த வண்ணம் இருப்பவன். இதனாலேதான் அம்பிகையைத் தன் ஒரு பாகத்தில் இறைவன் வைத்துக் கொண்டான் என்று சிவபக்தர்கள் சொல்வார்கள். அதனால் அப்பெருமானுக்கு அர்த்தநாரீஸ்வரன் என்ற திருநாமம் அமைந்தது. ஆனால் அம்பிகைகையின் பக்தர்கள் அப்படிச் சொல்லத் தயங்குவார்கள். அம்பிகையே அந்தப் பாகத்தை உரிமையோடு பெற்றுக் கொண்டாள் என்பார்கள். அருணகிரிநாதர் அம்பிகையேதான் தன் வலப்புறத்தே இறைவனை ஏற்றுக் கொண்டுள்ளாள் என்பர். "ஒருவரைப் பாங்கில் உடையாள்" என்ற அடி இதனை நன்கு புலப்படுத்தும்.

"தியாகப் பொருப்பைத் திரிபுரந்தகனை
பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி"

எனக் கந்தரலங்காரம் கூறும்.

சிவபக்தர்கள் இறைவனிடம் அர்த்தநாரீஸ்வரரான தெய்வீகக் கோலத்தைக் கண்டபின் அம்பிகை பக்தர்களோ அர்த்தநாரீஸ்வரியாகக் கண்டார்கள் என்பது இங்கே புலப்பட்டு நிற்கின்றது.

அபிராமிப்பட்டரும் அப்படியே தான் காண்கின்றார். அம்பிகை இறைவனின் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு ஆட்சி நடத்துகின்றாளாம். அவனுடைய இடப்பாகத்தில் ஒரு பாதியை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்சி செலுத்தும் பராபரையாக இருக்கின்றாளாம். இதனை அபிராமிப்பட்டர் கூறும்போது, சிவபெருமான் காமனை தன் கண்களால் அழித்தவன். தவவிரதம் பூண்டவன். அவனையே மயக்கி ஒரு பாகத்தில் குடிகொண்டு ஆட்சி நடத்துகின்றாளாம் அம்பிகை என்கின்றார்.

'விழியால் மதனை அழிக்கும் தலைவர்
அழியா விரதத்தை அண்டமெல்லாம்'
"பழிக்கும்படி ஒருபாகம் கொண்டாடும் பராபரையே" என்பர்.

அப்படியாக உள்ளவள் தன்னுடைய அளவற்ற கருணையினால் தன் பக்தர்களுக்குத் தரிசனம் தருவாள். அன்பர்கள் விரும்பிச் செய்யும் பூசைக்குத் தரிசனம் கொடுப்பாள். பலவகையான கிரியா முறைகளை உடையது தேவி பூசை. அந்தக் கிரியைகள் எல்லாவற்றையும் ஏற்று மனமகிழ்ந்து அவரவருக்கு அருட்காட்சி கொடுப்பாளன்றோ அம்பிகை. இத்தகு தேவியின் தரிசனத்தைப் பெற்றவர் அபிராமிப்பட்டர். இப்பேரருளை நினைந்தே தன் இணையற்ற கருணையினால் அபிராபிப்பட்டருக்கு கண்ணுக்கும் கருத்துக்கும் வாக்குக்கும் எட்டாத தன் அழகு வடிவத்தைக் காட்டியருளினாள். *'மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி, என்றன் விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்'* என்று வியந்து பாடினார்.

இத்தகு பெருமையும் புதுமையும் வாய்ந்த அம்பிகையான புவனேஸ்வரி தானிருப்பதற்குத் தன்திருவுளப்படியே மணித்துவீபம் என்ற அதிசய ஆனந்த புவனமாகிய இம் மணிபல்லவத்தைத் தேர்ந்தெடுத்தாள். அங்கே கடலின் நடுவே பலவித இரத்தினங்கள் குவிந்து கிடக்கும். மணற்பரப்பில் இருக்கும் சிந்தாமணி பீடத்தில் கொலுவீற்றிருக்கின்றாள். இப்புவனேஸ்வரிதேவியை ஆராதிப்பவர்கள் யோகிகளாகவும், சித்தர்களாகவும், புகழ் பெற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். புவனேஸ்வரியை உபாசித்ததன் பயனாய்ச் சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌபாக்கியம் என்ற ஐஸ்வரியமும் கிட்டும். அவளைத் தினம் தியானித்துத் தொழுபவர்களுடைய வாழ்க்கை படிப்படியாக மேன்மை அடையும் என்பதற்கு நிறைந்த பல சாட்சியங்கள் உண்டு. அம்பிகையின் திருவருளின் பெருமை பற்றி உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வரும் ஆச்சரியம் மிகுந்த அடியார்களின் திருமுகங்களும், அவர்கள் நேரடியாகக் கூறும் செய்திகளும் நம்மை வியப்படையவும் , மெய்சிலிர்க்கவும் வைப்பதாக இருக்கும். அத்தகைய மகோன்னதமான திருவருட் சக்தி கொண்டவள் அன்னை ஸ்ரீநாகபூசணி.

நாட்டிற் காலத்திற்குக் காலம் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள் பாதிக்கப்படாமல் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை அப்பிகையின் திருவருள் என்றே கூறவேண்டும்.

இத்தகைய பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவளாகிய அன்னை ஸ்ரீநாகபூசணியின் ஆலயத்தில் ஆண்டு தோறும் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டுப் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் அலை அலையாகத் திரண்டு அன்னையின் அருள் பெற்றேக வந்து செல்வர். வழமைபோல் இவ்வருட மகோற்சவத்துக்கும் அடியார்கள் பெருந் தொகையாக வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அம்பிகையின் மகோற்சவத்தை முன்னிட்டு வருகை தரும் அடியார்களுக்கு அம்பிகை அனுக்கிரகம் வழங்கி அவர்கள் எல்லோருக்கும் நிறைவான நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்றும், அம்பிகையை நேரில் தரிசிக்க முடியாமல் தூர தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அடியார்களினது நல்வாழ்வு வேண்டியும், இடப்பெயர்வுகளினாலும் சூழ் நிலைகளாலும் அகதிவாழ்வென்ற அவல வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் வேண்டியும், அவர்களின் சுபீட்சமான எதிர்காலம் வேண்டியும், அம்பிகையைப் பிரார்த்திப்பதோடு, நாட்டிற் சாந்தியும் சமாதானமும் நிலவி, அன்பும் அருளும் தழைத்து, மன அமைதியும் நிறைவும் கொண்ட நல்லதோர் சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று மனமுருகிப் பிரார்த்திப்போமாக. அனைத்து மக்களுக்கும் நிறைவான வாழ்வு மலர அம்பிகை அருள் பாலிப்பாளாக.

எனக் கென்றோர் தனிவரம் நான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வென்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங் கொண்டு தீங்கிளைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்த
தரணி தனில் சாந்தியையே தருவாய் நீயே.

நா. யோகநாதன் பீ. ஏ.
நிறைவேற்று அலுவலர்,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாட்டின் அவசியம்

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பகே கௌரீ நாராயணீ நமோஸ்துதே !

(நம்மிடையே பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறைவழிபாடில்லாமல் வாழமுடியாதா? நாம் வணங்காவிடில் இறைவனுக்கு என்ன நஷ்டம்? ஆலயத்திற்கு சென்றுதான் வழிபாடு செய்யவேண்டுமா? என்ற வினாக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடைகாண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.)

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகப் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருள், ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாதவனாக, பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானாகப் போற்றப்பட்ட போதும், பரிபூரணானந்தமாய் பரந்து விரிந்து எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் ஆன்மாக்கள் உய்தி பெறும் பொருட்டு உருவத் திருமேனி கொண்டு காட்சி தரும் இருப்பிடங்களே திருக்கோயில்கள் என்பதை நாம் என்றென்றும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஆன்மா ஒடுங்குமிடம், ஆன்மா இலயித்திருக்கும் இடம், ஆன்மாவிடமுள்ள மலமாகிய ஆணவம் அடங்கும் இடம் என்றெல்லாம் ஆலயத்திற்கு அர்த்தம் கூறப்படுகின்றது. சமய மரபும், கலை மரபும் சங்கமமாகுமிடமாகவும், ஆசார சீலர்களாகவும் அனுட்டான சீலர்களாகவும் அடியார்கள் கலந்து கொள்ளுமிடமாகவும், நமது பழம் பெரும் பண்பாடும் கலாச்சாரமும் சமய நெறிகளும் கட்டிக் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இடமாகவும் ஆலயம் மிளிர்ந்து கொண்டிருப்பதையும் நாம் உணர்கின்றோம்.

இறைவனை வழிபட ஆலயத்திற்குச் செல்வதில் தனிச் சிறப்புண்டு. அனைவருடைய பக்தியுணர்வும் ஒரு முகப்பட்டு, ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவன் மீது லயிப்பதும், அந்தத் திருக் கூட்டத்தில் நம்மையும் ஒரு அங்கமாக்கிக் கொண்டு வழிபாட்டில் ஈடுபடுவதும், ஒரு தனி அனுபவமாகும். இந்த அனுபவத்தைப் பெறுவதற்காக இந்துக்களுக்கு ஆலய தரிசனம் அவசியமாக அமைகின்றது. இந்த அனுபவத்தால் வாழ்க்கைத் துன்பங்களை மறக்கவும், சுமைகளைக் குறைக்கவும், மனோரம்மியமான சாந்தியும் அமைதியும் கலந்த ஒரு தெய்வீக நிலை உருவாகவும் ஏதுவாகின்றது. மனித உணர்வுகளூடாக அதை ஊடுருவ வைத்து ஆன்மீக உணர்வுகளை ஊட்டுவிக்கும் அமைவிடங்களாக ஆலயங்கள் அமைகின்றன. ஆலய அமைப்பிலும் ஆலயக் கிரிகைகளிலும்கூட, ஆகம விதியும் தத்துவக் கருத்துக்களும் இழையோடி இருக்கின்றன என்பதை உணரவேண்டும். ஆலயங்கள் வெறும் பிரார்த்தனை மண்டபங்கள் மட்டுமல்ல. கோபுரத்தாலும், சிற்பத்தாலும் நாதத்தாலும் வேதத்தாலும் வேறு பல தெய்வீகப் பிரதிபலிப்புகளாலும் ஆன்மீக உணர்வுகளையும் தத்துவக் கருவூலங்களையும் தந்து கொண்டு இருக்கும் அற்புதமான ஆன்மீக ஊற்றுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன் வழிபட்டு அலையும் மனிதனை ஒரு மனப்படுத்தும் ஆரம்ப இடம் ஆலயம். அவன் ஒரு மனப்பட்டுப் புனிதனாகும் போது, தெய்வீகம் அவனில் குடி கொள்கின்றது. "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன். நினையாதொரு போதும் இருந்தறியேன்" என நெஞ்சுருகிப் பக்திப் பரவசத்தோடு பாடிப் பரவும் போது, சிறந்தடியார் சிந்தனையில் தேனூறி நிற்கின்றான் இறைவன். தன்னை மறந்து தன் நாமம் கெட்டு, இறைவன்பால் தலைப்பட்டு நிற்கும் உள்ளத்தினை இறைவன் கோயிலாகக் கொண்டு விடுகின்றான்.

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காணா மணி விளக்கே"

என்கின்றார் திருமூலர். நீண்ட காலமாக ஆலய வழிபாடு எமது சமயத்தில் வேரூன்றிய ஒன்றாகும். ஊர் முழுவதும் ஆலயம் அமைத்து வழிபாடாற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர்கள் நம் ஆன்றோர். இந்து ஆலயங்கள் வாழ்க்கை நடைமுறைகளின் சீரிய பிரதிபலிப்புகளாகவும் திகழ்கின்றன. ஆலய கோபுரங்களில் வாழ்க்கைப் பேருண்மைகளை விளக்கும் உயர்ந்த சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும். ஆண்டவனின் திருவிளையாடல்கள்கூட வாழ்க்கையை ஒட்டி அமைந்தன. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வேண்டுமென இந்து தர்மம் உபதேசிக்கின்றது. அப்படி வாழத் தெய்வபக்தி அவசியம் என்று இந்து மதம் வலியுறுத்துகின்றது. அந்தத் தெய்வ பக்தியை நினைவுபடுத்தும் உயர்ந்த இடங்கள்தான் இந்து ஆலயங்களாகும்.

திருக்கோவில்களின் கோபுரத்தில் காட்சியளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர் ஆட்காட்டி விரலைக்காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்வோருக்கு கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. இதையே "ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்ம" என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றேதான். இரண்டாவது இல்லை என்பது இதன் பொருள்.

விலங்குகளும் உண்ணுகின்றன, உலாவுகின்றன. உறங்குகின்றன வம்சத்தையும் வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்றோம், உலாவுகின்றோம், உறங்குகின்றோம், மக்களைப் பெறுகின்றோம். விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காணப்படுவது தெய்வ உணர்ச்சி ஒன்றாலேயேதான். அந்தத் தெய்வீக உணர்ச்சி ஆறறிவு என்ற மேலதிகத் தகுதியை மனிதன் பெற்றிருப்பதினாலேதான் அவனுக்கு ஏற்படுகின்றது.

கருணையே வடிவமான இறைவன், இந்த உடம்பை உயிர்கள் மீதுள்ள இரக்கத்தினால் வழங்கினான். அந்த உடம்பினால் அவனை வழிபடவேண்டியது நமது தார்மீகக் கடமை என்பதை ஒரு போதும் நாம் மறந்து விடக் கூடாது. இதனை அப்பர் பெருமான் அழகாகச் சொன்னார். *"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை, சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே"* என்பது அப்பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எங்கும் இருப்பினும், ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் மறைந்திருக்கின்றான். பாலில் நெய் மறைந்திருப்பது போல் பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணை திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பது போல் ஞானிகள் உள்ளத்திலும் திருக்கோயில்களிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

மற்றைய இடங்களில் இறைவனை நாம் நினைந்து தியானிப்பதனாலும், துதிப்பதினாலும், வழிபடுவதினாலும் வினைகள் வெதும்புகின்றன. கோவிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து நீறாகிவிடுகின்றன. பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூரிய காந்தக் கண்ணாடி பாச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும், திருக்கோவிலில் இறைவனை வழிபடுவது சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ், வைப்பது போலாகும். சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ் துணி வெந்து சாம்பராகி விடுவது போல், ஆலயத்தில் வ்ழிபாடு செய்வதன் மூலம் நம் வெவ்வினைகள் வெந்து அழிந்து சாம்பராகி விடுகின்றன.

பசுவின் உடல் முழுவதிலும் பால் பரவி இருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவது போல் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோவிலில் உள்ள திருவுருவங்கள் மூலமாகவே நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம், அம் மருத்துவமனையை நாடிவரும் பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதற்கேயாகும். அதேபோல் இறைவனும் ஆலயத்தில் எழுந்தருளி இருப்பது தன்னை நாடிவரும் அன்பர்களின் பிறவிப் பிணியைப் போக்கி ஆனந்தமான பெருவாழ்வைக் கொடுப்பதற்கேயாகும்.

எண்ணரிய பிறவிகளில் இனிதாகிய அரிதாகிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம், " இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற நாவலர் பெருமானின் நல் வாக்கை கருத்திற் கொண்டு "கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் அன்றொருநாள் அறிவுப் புயலாய் வீசி மறைந்த ஔவை மூதாட்டியின் மந்திர வாக்கியத்திற்கு மதிப்பளித்து, மனிதப்பிறவிக்கு இறைவழிபாடு இன்றியமையாதது என உணர்ந்து அவ்வழிபாட்டுக்கு சிறந்த இடம் ஆலயம் என்பதைத் தெரிந்து, ஆலய வழிபாடியற்றி வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் நாம் வானுறையும் தெய்வீக நிலைக்கு உயருவோம். உயர்த்தப்படுவோம் என்பதை உணர்வோமாக.

சுப மங்களம்

சாஹித்ய சிரோன்மணி
சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள்
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு அலங்காரத் திருமஞ்சம் அமைத்து

11.06.2000ல் வெள்ளோட்ட விழாக்கண்டபோது பாடப்பெற்ற

'திருமஞ்சத் திருப்பாடல்கள்'

மஞ்சத்தில் வாரீர் அம்மா!

1. மூலமுறு பழம்பொருளின் முதலே சக்தி
முகிழ்த்தெழுந்த உற்பவத்தின் முடிவே உன்னை
ஞாலமுறு உயிர்வகைகள் அண்டகோடி
நாடிவர நயினையிலே கோயில் கொண்டு
சீலமுறு தெய்வீகக் காட்சி நல்கி(த்);
திசைமிசை கொண்(டு) அடியார்கள் சிரமேற்கூப்ப (க்)
காலமெலாம் நின்கருணை காட்டி நின்றாய் ;
கண்மணியே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

2. எழுகின்ற இளம்பரிதிக் கதிர்கள் உந்தன்;
இதயத்தின் இயக்கத்தில் இயக்கம் பெற்று ;
விழுகின்ற பரப்பெல்லாம் விளக்கங்காட்ட ;
விழுப்பொருள்நின் அளப்பரிய விம்பம் கண்டு;
தொழுகின்றோம் அம்மம்மா எங்கள் வாழ்வின்;
தோற்றமுமாய் முடிவுமாய் (த்) துணையாய் நின்றாய்:
அழுகின்றோம் ஆனந்தக் கண்ணீர் ஊடே:
அம்பாளே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

3. இந்திரனார் அமைத்தமணிப் பீடம்மீதில்
எழுந்துபடம் விரிகின்ற நாக நிழல்;
சுந்தரமாய் அமர்ந்திருந்து தொழுவோர்க்கென்றும்;
துணையாகப் பெருங்கருணை சுரக்கும் அன்னே!
இயந்திரமாம் சக்கரங்கள் ஊர ஊடே;
இயக்கமுறும் ஆன்மாக்கள் இன்னல்போக்க;
மந்திரமாய் வேதஒலி மணிகள் ஆர்ப்ப;
மணித்தீவில் மஞ்சத்தில் வாரீர் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முற்பிறப்பின் தத்துவங்கள் முழுதும்காட்டி;
முடியாத பசிப்பிணியை முடித்துக்காட்டி.
அற்பர்களுக்(கு) இப்பிறப்பில் அறிவுகாட்டி;
அமுதமொழி மழலைகளை அளித்துக்காட்டி;
பொற்பதத்தில் அற்புதங்கள் பொருத்திக்காட்டி(ப்)
புரிந்தபல பெருமைதரு புதுமைகாட்டி;
கற்பகமே நின்கருணைக் கடலைக்காட்டி(க்)
கண்களிக்க மஞ்சத்தில் வாரீர் அம்மா!

5. அன்னையுன(து) அருட்புனலில் தோய்ந்த அன்பர்
அள்ளிவரு அருட் செல்வம் அழியாதாக்கி
முன்னை உயர் கற்கோயில் அமைத்து வீதி;
முத்தேர்கள் உலாவருதல் கண்டுபோற்றி(ப்);
பின்னையும் உன் பெருங்கருணை பெருகநெஞ்சம்
பெரிதுவந்து "திருமஞ்சம்" அமைத்தாரிங்கே
வண்ணமுற நீஅமர்ந்து திருக்கோலத்தின்
வனப்புமிகு மஞ்சத்தில் வாரீர் அம்மா!

6. திடங்கொண்ட கல்நெஞ்சம் உருகி அன்பர்,
திக்கெல்லாம் திருக்கோலக் காட்சிகாண
இடங்கொண்டு இரவெல்லாம் விழித்துக்கண்கள்
இமையாமல் இன்னருளை வேண்டி அன்பு;
வடங்கொண்டு நிரைநிரையாய்(ப்) பற்றிஉந்தன்;
வரங்கொண்டு போவதற்காய் வந்தார் தாயே!
விடங்கொன்ற உத்தமியே நாகம்மாளே!
வீதியுலா மஞ்சத்தில் வாரீர் அம்மா!

07. மெய்வருத்தம் பாராார்தம் பசியும் நோக்கார்;
மிக்கதொரு திருப்பணியில் மிடுக்காய் நின்றார்;
கைவருத்தம் பாராது சிற்பம் செய்து
கலைவடித்து(ச்) சிலைநிறுத்திக் கடமை செய்தார்
செய்கருமம் திருவருளின் துணையாய் நின்று
செம்மையுற அம்மையுனக்(கு) ஆளாய் ஆனார்
உய்வதற்கும் உன் அருளே துணையாய்க் கொண்டார்;
உமையவளே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பெருநிதியைத் தவநிதியாய் உந்தன்பேறாய்(ப்);
பெற்றதொரு பொக்கிசமாய் உணர்ந்துதந்து;
வருநிதியும் வளங்களையும் வகையாய் உள்ளம்;
வழிப்படுத்தப் பழிஅஞ்சி; வற்றாச்செல்வம்
ஒருநிதியும் அவமாகப் போகாது ஈந்து;
உருப்பெருக்கி அருட்பெருக்கில் உழைத்தார் தொண்டர்;
திருநிதியே திரண்(டு) உருவில் மஞ்சம்ஆச்சு(த்)
திருப்பெருக மஞ்சத்தில் வாரீர்அம்மா!

9. கடல் அலைகள் 'ஓம்சக்தி' என்ற நாமம்
கலந்துவரத்; தென்றலது தழுவிமேவ;
உடல்இலைகள் கொம்பரெலாம் உணர்ச்சிபொங்க;
ஓங்கிவளர் வேம்பினங்கள் கூத்துஆட;
திடல் நடுவே நிழலூடு கூடும் தொண்டர்;
திரண்டிருந்து தோத்திரங்கள் இசைத்துப்பாட;
படமெடுத்து ஐந்துதலை நாகம் ஆட(ப்)
பார்வதியே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

10. நின்னடிக்கே விழாக்காணும் கொழும்பார் தொண்டர்,
நினைவிருத்தி உனைநினைத்த நயினை அன்பர்,
பின்னடிக்கே பெருந்தவங்கள் முயன்றபக்தர்,
பெரும்பணிக்கே தமைப்பணித்தார், பிறவா உந்தன்
பொன்னடிக்கே பீடங்கள் அமைத்து, வைரம்
பூண்டொளிரும் பவளக்கால் சமைத்துரூபம்,
கண்ணடிக்கே கண்டுவகை கொண்டார்அன்று,
களித்தின்று மஞ்சத்தில் வாரீர் அம்மா!

11. உந்தனது அம்மஞ்சம் எரிந்த(து) ஊழால்,
உறுஈர்ஏழு ஆண்டுகளின் பின்னர்இன்று
வெந்ததனை வியனுருவாய் மாற்றித்தந்து,
வெளிக்காட்டி உயிர்ப்பூட்டி, வீரத்தாயாய்
வந்துஎழில் வடிவோடு வீற்றுவீதி,
வலம்வருதல் கண்டுகளி கூரச்செய்தாய்
முந்துறவே இனிவினைகள் முடித்துவைக்க,
முழுவடிவாய் மஞ்சத்தில் வாரீர் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம்

மஞ்சமதை அன்றுதந்த விஞ்சவரு கொழும்பார்,
மாட்சியினில் ஓங்கிவளர் நயினையுளார் வாழி
நெஞ்சுநிறை அன்பினொடு நின்னடியை ஏத்தி
நெக்குருகி இன்றுமஞ்சம் நிறுத்தியவர் வாழி!
செந்தமிழர் தம்மண்ணில் தெய்வீகம் ஓங்கி(த்)
தெருவெல்லாம் அருள்வாழ்வு கிளர்ந்தொளிர வாழி!
அஞ்சுகமே நயினைமணி நாகம்மை அம்மே!
ஐந்துதலை நாகமும்நின் அருள்பொலிவும் வாழி!

நயினைக் கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை. பீ. எஸ்சீ

அன்னையின் அருட்தொண்டில் தம்மை அர்ப்பணித்து
அமரத்துவம் அடைந்த அனைத்து மக்களுக்கும்
இப்பாடல்கள் சமர்ப்பணமாகுக.

அம்பாள் அரிச்சுவடி மாலை

அழகிய நயினை அம்பாளே
அம்பிகை யேநாக பூஷணியே
ஆழ்கடல் மத்தியில் அமர்ந்தவளே
ஆனந்த சாகரத் தணைத்தருளே
இருவினை அகற்றிடும் இனியவளே
இன்ப சுகம்மிகத் தந்தருளே
ஈஸ்வரன் பாகத்தில் இருப்பவளே
ஈஸ்வரி யேஎனைக் காத்தருளே
உருவரு வாகிடும் உமையவளே
உந்தன் அடைக்கலம் எனக்கருளே
ஊழ்வினை களைந்திடும் உயர்ந்தவளே
ஊக்கிஎன் பாழ்வினை போக்குவளே
எங்கும் நிறைந்தெழில் தருபவளே

எங்கள் குலக்கொடி மலைமகளே
ஏகமாய் பலவாய் இருப்பவளே
ஏக்கமும் கவலையும் தீர்ப்பவளே
ஐந்து கரத்தனை உவந்தவளே
ஐந்து புலனகத் தடைத்தருளே
ஒன்றியென் உள்ளத்தில் உறைபவளே
ஒப்பிலா நற்பதத் துணையருளே
ஓங்கிய தாய்மையின் உட்பொருளே
ஓம்பிஎவ் வுயிர்க்குயிர் ஆனவளே
ஔடதம் ஆன்மாவுக் குன்னருளே
ஔவியம் களைந்தெனை ஆண்டருளே
அஂதென தின்பமாம் அனுபவமே
அஂதினை அஂதாய் அறிகுவமே

தஞ்சமென அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரகூபிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

சித்திரத் திருமஞ்சத்தை

சிற்பக்கலை மிளிர அமைத்துத் தந்த

அராலியூர் சிற்பக் கலைஞர் சிற்ப கலாவிநோதன்

திரு. சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களுக்கு

மேற்படி ஆலய அறங்காவலர் சபையினரால் 11. 06. 2000ந் திகதி

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருமஞ்ச வெள்ளோட்டத்தன்று வாசித்தளித்த

மங்கல வாழ்த்துப் பாமாலை

கொடியேற்றம் முதலாக கோலவருட் காட்சிதரு நாகம் மைக்கோர்
மிடிதோற்றம் செயலூக்கம் மிகு கொழும்பு வணிகர் தம துபய நாளில்
அடிவானின் கதிரொளிபோல் அழகொழுக அசைவுறுநற் கோபுரம் போல்
வடிவான திருமஞ்சம் அன்னை வலம் வருவதற்கு வடித்துத் தந்தார்.

எம்பகைவர் வைத்த எரிஎழில் தேர்கள் சப்பறமும் மஞ்சமெல்லாம்
வெம்புகையாய் எரிதணலாய் வேக வைத்த நிலை கண்டு உலகில் வாழும்
அம்பிகையின் அடியார்கள் அறங்காவல் சபையார்கள் உபயகாரர்
தெம்பிழந்த நிலை நீடு செல்லாது திருமஞ்சம் திரும்பச் செய்தார்,

அழிவற்ற கலைச்சிற்பம் ஆக்குதிறன் ஆசாரி அராலியூரின்
வழிவந்த சிற்பகலா விநோதன் என்னும் அமரசிங்கம் வடிவமைத்த
எழில் கொஞ்சும் திருமஞ்சம் எம் மம்மை நாகம்மை எழுந்து ஏறி
வெளிவந்த திருக்கோலம் மெய்யடியார் தமை ஈர்க்கும் வியந்து நோக்கும்

வெங்கொடிய எரிநாக்கு இரையாக்க மெய்யடியார் விசனம் எய்திப்
பொங்கு துயர் தீர்க்க வென அறங்காவல் சபை பொருந்தி அமரசிங்கம்
தம்பியுயர் கலைக்குருசில் கணேசலிங்கம் துணையும் தலைமைப் பண்பும்
எம்பெருமாட்டி அருளும் இயக்கிய நல்எழில் கொஞ்சம் மஞ்சம் கண்டோம்

கொம்பனையாள் குவிமுலையாள் நாகம்மை கொலுவிருக்கும் மஞ்சம் தன்னில்
அம்பிகையின் அருளாளர் அபிராமி பட்டரவர் சரிதம் தன்னை
நம்பியிவன் சிலை வடிவில் நலங் கொளிக்கச் சித்தரித்து நம்மையெல்லாம்
வெம்பி மனம் நெக்குருகு விதத்தினிலே வடித்தமையை மெச்சி நிற்பாம்

183622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

உறங்காது அயராது ஊக்கமொடு திருமஞ்சம் உருவாக்கத்தில்
திறங்காட்டு கலைக்குழுவின் சீரியநற் சேவைதனைக் கருத்திற் கொண்டு
அறங்காவல் சபையினரும் அம்பிகையின் பத்தாம் நாள் உபயகாரர்
புறங்காணா வகைநின்று போற்றி நலம் பாராட்டிப் புகழ்ந்து நிற்போம்

வாழ்த்து

குன்றிலிட்டொளிர் தீபமாய் நின்புகழ்
குவலயந் தொறும் நின்று ஒளிரவும்
மன்றிருந்திடு கற்றவர் மற்றவர்
மனமகிழ்ந்து நும்மை மதிக்கவும்
நின்று நீடு பல்லாண்டுகள் வாழ்ந்துமே
நிகரில் சிற்பக் கலை நிலை பெற்றிட
என்றும் அன்னையாம் நாகம்மை இன்னருள்
எய்தி நீவிர் இனிதுமே வாழ்கவே

சுபமங்களம்

அறங்காவலர் சபையினர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

அலையாழி சூழ்நயினை நிலையாக உறைதேவி
அகிலாண்ட புவனேஸ்வரி
அன்பருளம் மகிழவே இன்ப நிலை தந்திடும்
அன்னையே நாகேஸ்வரி
நிலையாத உலகினில் மலையாத பொருளும்நீ
நினைப்பவர்க் கருள் செய்வாய் நீ
நித்தமும் வழிபடும் அடியவர் இடரெலாம்
நீறுபடவே அருளுவாய்
குறையாத அன்பினொடு தொண்டுபுரி மெய்யன்பர்
குறையெலாம் நீக்கியருள்வாய்
குற்றேவல் புரியன்பர் தொண்டினுக் கேயன்புத்
தொண்டனாய் நின்று காப்பாய்
அடியவர் குறைதீர அருள்புரி தேவியே
அன்னைபரமேஸ் வரித்தாயே
அகண்ட பரிபூரண சுத்தசிவ சக்தியே
அன்னைநாகேஸ் வரித்தேவியே.

சைவப்புலவர் நா. விஸ்வலிங்கம் J.P.
அறங்காவலர் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
உள்வீதி சுற்றுப்பிரகாரத்
திருமுறைத் தோத்திரப் பாக்கள்

(சக்தி உபாசகர்கள் மனனம் செய்வதற்குரியவை)

விநாயகர் துதி

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

கும்பமாமுனியின் கரகநீர் கவிழ்த்துக்
குளிர்மலர் நந்தனங் காத்துச்
செம்பொனாட் டிறைவர்க்கு அருளிய
நினது திருவருட் பெருமையை மறவேன்
நம்பினார்க்கினிய அருண் மகப்பேறே
நற்குணத்தோர் பெரு வாழ்வே
வம்பறா மலர்த்தார் மழைமுகிற் கூந்தல்
வல்லபைக் கணேச மாமணியே.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கி யாதுமோர் குறைவில்லைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமணலாலிங்க மண்ணியின் கட்பாலாட்டும்
சிந்தைசெய் வோன்றன்றன் கருமந்தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.

திருத்தாண்டகம்

எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்கள்
இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி
கொங்கையிணை அமர்பொருது கோலங்கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூலுண்டே
சாந்தமொடு சந்தனத்தின் அளறுதங்கி
அழுந்திய செந்திருவுருவில் வெண்ணீற்றானே
அவனாகில் அதிகை வீரட்டனாமே.

திருவாசகம்

துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

வணங்கத் தலைவைத்து வார்கழல்
வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார்
கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடி நாம்
பூவல்லி கொய்யாமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா

அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்த வொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறிவாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரானாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயுமாயினையே.

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
யீசற்காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ள
பெருளென்றெ பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதளா
னங் கொடுப்ப வழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெருமக் களுமியைந்த கூட்டத்தி
லரனடியா ரின்ப மெய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம் பெருகு
மொலி நிறைத்தா ருலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை புராணம்

காரொழுகுங் குழலாளை கருணை வடிந்தொழுகும்
இருகடைக் கண்ணாளை
மூரலிள நிலவெறிப்ப அழகொழுகப்
புனுகொழுகும் முகத்தினாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரிவரிய மருங்குலாளை
சீரொழுகும் பதத்தாளை அருணை உண்ணா
முலையாளைச் சிந்தை செய்வாம்.

திருமந்திரம்

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமுமாமே.

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடுந் திருமுறை பார்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த்தோத்திரஞ் சொல்லுமே.

திருப்புகழ்

வாதினை அடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம் தொழிந்து – தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகன் புனைந்து
மாபத மணிந்து – பணியேனே
ஆதியோடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று – தெரியேனே
ஆனதனி மந்ர ரூபநிலை கொண்ட
தாடுமயிலென்ப – தறியேனே
நாதமொடு விந்து வாகியுடல் கொண்டு
நானிலமலைந்து – திரியாதே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடிஅதில் நின்று – தொழுகேனே
சோதி உணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோஹமது தந்து – எனையாள்வாய்
சூராகுலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற – பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரநுபூதி

யாமோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருய்வாய் குகனே.

கந்தரலங்காரம்

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென்செய் வார்யம தூதருக்கே.

அபிராமி அந்தாதி

மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்த பின்னே.

பின்னே திரிந்துன் னடியாரைப்
பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்
டேன் முதல் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி
யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற
வாமனின் றேத்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமங் கடம்பு படைபஞ்ச
பாணம் தனுக் கரும்பி
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள்
நான்கு ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு
இரண்டு நயனங்களே.

தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன வெல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே.

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்
குசமுங் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

பூத்தவளே புவனம் பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை யன்றி
மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

தொடுக்குங்கடவுட் பழம்பாடற் தொடையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே
அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும்
விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்
பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே
மதுகரம் வாய்
மடுக்குங் குழற் காடேந்து மிளவஞ்சிக்
கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெருவாழ்வே
வருக வருகவே.

பெருந்தேன் இறைக்கும் நறை கூந்தற்
பிடியேவருக முழுஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்பெம்
மான்முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே
வருக வித்தின்றி
விளைக்கும் பரமானந் தத்தின் விளைவே
வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பேவருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார்
பிறவிப்பெரும் பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை மழலைக்
கிளியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வே
வருக வருகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாளி அறிதுயில் கொள்மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

நாகபூஷணி அம்பாள் துதி

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான்ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுறவேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவரொப் பில்லாத்தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய்நீயே.

நயினை மான்மியம்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்
உதவலா லன்னை எக்கலையும்
செற்றதா லன்னை உலகொடு வானுந்
தொழுதலா லன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
மங்கல மணம்பரவு மலர் தலைக் காலைபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமாயவிருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமனவீறு தருவாய்
பொங்குதிரை ஆழிபோல் என்னுள்ளம் பூரிக்கப்
பொதுவேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்துசாந்தம் அளிப்பாய்
செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்யஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர்யோகமும் திருக்குறளின்
வாழ்வும் அருளாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்தனைக்
காத்து அருள் அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம்சுத்தசக்தியே
போற்றி போற்றி.

வசந்த மண்டபத்தின் இருமருங்குமுள்ள பாடல்கள்

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்கு சிவ சங்கரி
சகஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னயுங் கன்னியென மறைபேசும்
ஆனந்தரூப மயிலே
வாரணியும் இரு கொங்கை மாதர்மகிழ்
கங்கை புகழ் வளமருவு தேவை அரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப்பெண் உமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திபை ரவி கௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்சரத்தி சங்கரி சுமங்கலி
மதங்கியரு ளம்பிகை சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவுமங்கை உலகுதவு மன்னையா
மளை பொன்னினம்பலவ ருடனிடமகிழ்ந்து மேவு
நித்திய கல்யாணி சாம்பவி புவன கௌமாரி
நிமல மகமாயியென்றெ நெங்சில் நிதமுந் நினைவு
தந்துனை வணங்கவரு நின்னடியவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி மெத்து நயினா நகரில்
நாளுமுறை யாழின் மொழியே நாகமணியும் பரமர்
பாகமுறு மேகசிவ நாக ஈஸ்வரி யம்மையே.

ஓம் சக்தி சக்தி சக்தியென்று சொல்லு கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு
ஓம் சக்தியருளா லுலகில் ஏறு ஒரு
சங்கடம் வந்தாலிரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் அவள்
தண்ணருளென் றேமனது தேறு.

நால்வர் வயது

அப்பருக்கு எண்பத்தொன்று அருள்வாத வூரருக்கு
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் – இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தருக்கு
அந்தம் பதினா றறி.

நால்வர் துதியும் திதியும்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

சித்திரைச் சதயமப்பர் சிறந்த வைகாசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்திலந்த
முத்தமிழ் வாதவூரார் முதியநல் லாடிதன்னில்
சுத்தமாஞ் சோதிநாளில் சுந்தரர் கைலைசேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு திருமுறை பாடிய செல்வர்

திருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளிகைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள்
வாய்த்த திருவாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னு திருவாலவாயர்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடர்தாம்
ஒண்கபிலர் பரணர் மெய்யுணரிளம் பெருமானோ
டோங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத் தடிகளோடு நம்பியாண்டார்
நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்வீகத் தன்மையோரே.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

அறுபத்துமூவர் துதி

ஒப்பினோடுயர்வு இகந்தவன்
உவந்தினி தருள
அப்புராதனன் தோழரும்
அருண் மொழிக் கவிஞன்
செப்பு மேன்மையின் ஒன்பதிற்று
எழுவர் செம்மலர்த்தாள்
வைப்பின் நாவினு மனத்தினுஞ்
சிரத்தினும் மணப்பாம்.

தத்து மூதெயில் மூன்றுந் தழல் எழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணைசேர் அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

சேக்கிழார் துதியும் திதியும்

தில்லைவாழ் அந்தணரே முதலாக சீர்படைத்த
தெல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரைமாதச் சதய(ம்) நிறைவண் றொண்டர்
ஆடியிற் சோதி திருவாதவூரர் நல்லானிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப்பூசஞ் சிறந்தனரே.

நம்பியாண்டர்நம்பி துதி

சீராருந் திருமுறைகள் கண்டதிறம் பார்த்திபனாம்
ஏராரும் இறைவனையும் எழிலாரும் நம்பியையும்
ஆராத அன்பினுடன் அடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதல்மிகுந் திருத்தொண்டர் பதம்துதிப்பாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாடிய யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி;
உத்தரியத் தொடித்தோள் போற்றி;
கரும்புருவச் சிலைபோற்றி; கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி;
இரும்புமனம் குழைத்து, என்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்பும்இள நகைபோற்றி; ஆரணநூ
புரம் சிலம்பும் அடிகள் போற்றி.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

அன்னை நாகபூஷணி

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ்
காரணி நாரணன் தங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின்
காமமே வளர்பசுங் கொடியே
நற்றவ நிலையின் சேயெனை இருத்தி
நாதநா தாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணா னந்த
முத்திதா நாகபூஷணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி அந்தாதி

காப்பு

தார்அமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே
உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும்
என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியே
நிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்தன் விழுத்துணையே. 1

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற
தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட
வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையும், மென்பாசாங்
குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி
ஆவது அறிந்தனமே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தேன் எவரும் அறியா
மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே
திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமை
எண்ணாத கருமை நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற
வாய மனிதரையே. 3

மனிதரும் தேவரும் மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை
செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய
அம்பிகை அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி அந்தரி
பாதம்என் சென்னியதே. 5

சென்னியது உன்பொற் திருவடித்
தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்
சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன்
கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உந்தன்
பரமஆகம பத்ததியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியுறு மத்தில் சுழலும்என்
ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்
டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்
மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய் சிந்துர
ஆனன சுந்தரியே. 7

சுந்தரி எந்தை துணைவி என்
பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள்
மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத
கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்
தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன
வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு
நல்கின பேர்அருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும்
செங்கைச் சிலையும் அம்பும்
முருத்துஅன மூரலும் நீயும்அம்மே
வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பதுஉன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்
தாள் எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே
உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா
முத்தி ஆனந்தமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாய் என் அறிவாய்
நிறைந்த அமுதமுமாய்
வான் அந்தமான வடிவுடையாள்
மறை நான்கினுக்கும்
தான் அந்த மான சரணார
விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான்
முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ் கற்பதுஉன்
நாமம் கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம்
புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மேபுவி
ஏழையும் பூத்தவளே. 12

பூத்தவளே புவனம் பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி
மற்றுஓர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப்பவர் உன்னை வானவர்
தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர்
நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்
பாரில் உன்னைச்
சந்திப்ப வர்க்(கு) எளிதாம்
எம்பிராட்டி நின் தண்ணளியே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணளிக்கு என்று முன்னேபல
கோடி தவங்கள் செய்வார்
மண்அளிக்கும் செல்வமோ பெறு
வார் மதி வானவர்தம்
விண்அளிக்கும் செல்வமும் அழியா
முத்தி வீடும்அன்றோ
பண் அளிக்கும் சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து
கிளர்ந்து ஒளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்குஇடமே
எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி
விரிந்த அம்மே
அளியேன் அறிவு அளவிற்குஅள
வானது அதிசயமே. 16

அதிசய மான வடிவுடை
யாள் அரவிந்தமெல்லாம்
துதிசயஆனன சுந்தர வல்லி
துணை இரதி
பதிசய மானது அபசய
மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ வாம
பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்து இறைவரும்
நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்
கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்துஎன்னை ஆண்ட
பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும்
போது வெளிநிற்கவே. 18

183622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின் திருமேனியைப்
பார்த்து என் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது
இல்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது
என்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
மேவி உறைபவளே. 19

உறைகின்ற நின்திருக் கோயில் நின்
கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ
முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ
கஞ்சமோ என்தன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோ பூர
ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை
யாள் மலையாள் வருணச்
சங்குஅலை செங்கைச் சகல
கலாமயில் தாவுகங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன்
புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள்
பசும்பெண் கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே
எனக்குவம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே
பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய
தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல்
வந்து ஆண்டு கொள்ளே. 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல்
லாது அன்பர் கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம்விரும்பேன்
வியன்மூவுலக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே
உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே
அளியஎன் கண்மணியே. 23

மணியே மணியின் ஒளியே
ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே
அணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே. 24

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

பின்னே திரிந்துஉன் அடியாரைப்
பேணிப் பிறப்புஅறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்
முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி
என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற
வாமல்நின்று ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரேழு
உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்
கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே மணம்
நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய
வாறு நகையுடைத்தே. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை
உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம்
சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை
எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்அருள்
ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் என நட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தரும்தெய்வம்
ஆகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும்
சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்
வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண்
டாய் கொண்ட(து) அல்லஎன்கை
நன்றே உனக்கினி நான்என்
செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை
நின் திருவுளமே
ஒன்றே பலஉருவே அருவே
என் உமையவளே. 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையும் உமையொரு பாகரும்
ஏக உருவில்வந்துஇங்கு
எமையும் தமக்குஅன்பு செய்யவைத்
தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றுஎடுப்
பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர்
மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு)
அருள்அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின்
பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல்
வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன் ஈசர்
பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழியே அடும்
காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சேல்
என்பாய் அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை
யாமளைக் கோமளமே
உழைக்கும்பொழுது உன்னையே அன்னையே
என்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்
அடியார்க்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய்
இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி
ஆகமும் பாகமும் பொற்
செந்தேன் மலரும் அலர்கதிர்
ஞாயிறும் திங்களுமே. 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கட் பசுவின் மணம்நாறும்
சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்தியவா
எண்இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ
தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில்
கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருள்முடிக்கும் போகமே
அரும் போகம்செய்யும்
மருளே மருளில் வரும்தெருளே
என் மனத்துவஞ்சத்(து)
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி
ஆகியிருக்கும் உன்றன்
அருள் ஏது அறிகின்லேன்
அம்புயஆதனத்து அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும்
பூவும் கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து
மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக்
கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை
யான்இடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்தசெவ்
வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணையா
எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடிஇடை
சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்
அமராவதி ஆளுகைக்கே. 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுகைக்(கு) உன்தன் அடித்
தாமரைகள்உண்டு அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்தன் விழியின்
கடைஉண்டு மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறையே
அன்று முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில்லான்
பங்கில் வாள்நுதலே. 39

வாணுதல் கண்ணியை விண்ணவர்
யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு
மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத
கன்னியை காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம்அன்றோ
முன்செய் புண்ணியமே. 40

புண்ணியம் செய்தனமே மனமே
புதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும்
கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து தம்அடி
யார்கள் நடுஇருக்கப்
பண்ணி நம் சென்னியின்மேல்
பத்மபாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு
இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு
இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட
நாயகி நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி
வேதப் பரிபுரையே. 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை
பஞ்சபாணி இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர
மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்
குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம்
பாகத்து இருந்தவளே. 43

தவளே இவள் எங்கள்
சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும்
ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும்
மேலை இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வம்உண்
டாகமெய்த் தொண்டு செய்தே. 44

தொண்டு செய்யாது நின்பாதம்
தொழாது துணிந்(து)இச்சையே
பண்டு செய்தார் உளரோஇலரோ
அப்பரி(சு) அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ
அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன்றே.
பின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்
தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதிய(து)அன்றே
புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம்
கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும்
யான்உன்னை வாழ்த்துவனே. 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன்
மனத்தே ஒருவர்
வீழும் படிஅன்று விள்ளும்படி
அன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்
எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே
கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும்
சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக்
கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்(து) இமைப் போ(து)இருப்பார்
பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும்
தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க
ஆவி வெங் கூற்றுக்(கு)இட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப்போது,
வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர்
சூழவந்(து) அஞ்சேல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி
வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாராயணி
கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கிஎன்று
ஆயகியாதி உடையாள் சரணம்
அரண் நமக்கே. 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணம் பொருள்என்(று) அருள்
ஒன்(று)இலாத அசுரர்தங்கள்
முரண் அன்(று) அழியமுனிந்த
பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற
நாயகிதன் அடியார்
மரணம் பிறவி இரண்டும்எய்தார்
இந்த வையகத்தே. 51

வையம் துரகம் மதகரி
மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை
ஆரம் பிறைமுடித்த
ஐய்யன் திருமனை யாள்அடித்
தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்(கு)
உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில்
சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்
முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண்
மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்(கு)இது
போலும் தவம்இல்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம்
பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்
நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால்
ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே. 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் ஆயிரம் ஒரு மெய்வடி
வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த
வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய
முதல்வி தன்னை
உன்னாது ஓழியினும் உன்னினும்
வேண்டுவது ஒன்றில்லையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்(து) இவ்வுல(கு)எங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள்
என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா
இப்பொருள் அறிவார்
அன்(று) ஆலிலையில் துயின்ற
பெம்மானும் என்ஐயனுமே. 56

ஐய்யன் அளந்தபடி இருநாழி
கொண்(டு) அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்
கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய் இதுவோ
உன்தன் மெய்யருளே. 57

அருணாம் புயத்தும் என் சித்தாம்
புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்
நல்லாள் தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம்
புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால்
கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் பிறி(து)இல்லை ஈதுஅல்ல(து)
என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்
ஒற்றை நீள் சிலையும்
அஞ்(சு)அம்பும் இக்(கு)அலராகி நின்றாய்
அறியார் எனினும்
பஞ்(சு)அஞ்சும் மெல்லடியார் அடியார்
பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்இனி யாய்பனி
மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர்வணங்க நின்றோன்
கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள்
பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன்
முடை நாய்த்தலையே. 60

நாயே னையும் இங்(கு)ஒரு
பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்
என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்
மால்திருத் தங்கைச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானவர்
முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரிஉரி போர்த்த
செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட
நாயகி கோகநகச்
செங்கைக் கரும்பும் மலரும்எப்
போதும் என்சிந்தையதே. 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறும் படிசில ஏதுவும்
காட்டி முன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும்
தறி குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய்
இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண்(டு) என்று
கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள்
பால்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு)அன்பு பூண்டு
கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திரு
மேனிப்ரகாசம் அன்றிக்
காணேன் இருநில மும் திசை
நான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும்
காண விற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும்செம்
முகனும் முந்நான்கு இருமூன்றுஎனத்
தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி
நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன்
நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று
இலேன் பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்
வினையேன் தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு
நாமங்கள் தோத்திரமே. 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்து தொழுதுமின்
போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்
வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி
நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா
நிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலும் கனலும் வெங்
காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி
ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார்
படையாத தனம்இல்லையே. 68

தனம்தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வுஅறியா
மனம்தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண்
டேன் கடம் பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும்
கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும்
ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே. 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத
வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்
தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள
யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ்சே இரங்கேல்
உனக்கு என்குறையே. 71

என்குறை தீரநின்று ஏத்துகின்
றேன் இனி யான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை
காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே. 72

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2001
PERIODICALS DIVISION

தாமம் கடம்பு படைபஞ்ச
பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள்
நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ(டு)
இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும்
வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம
வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர்
ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக்
காவினில் தங்குவரே. 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தாருவின்
நீழலில் தாயர்இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப்
பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழலாள்திரு
மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில் நின்கோலம்
எல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற
நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்
பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்ச
பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங்
குசை பஞ்ச பாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி
காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி
சூலி வராகி என்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும்
போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம
வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும்
விழியின் கொழும்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்
என் துணைவிழிக்கே. 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்கே அருளுண்(டு) அபிராம
வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு)
எமக்கு அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே
செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடு என்ன கூட்(டு)இனியே. 79

கூட்டியவா என்னைத் தன்அடி
யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா
தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத்
தாமரை ஆரணங்கே. 80

அணங்கே அணங்குகள் நின்பரி
வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன்
நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனதுஉன(து) என்று
இருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன் என்
கண்நீவைத்த பேரளியே. 81

அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே
அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு
மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள்
விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன்
நின் விரகினையே. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புதுமலர் இட்டு நின்
பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார்
இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிரா
வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்
காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்குசெம் பட்(டு)
உடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை
தயங்கும் நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான்
இடையாளை இங்கென்னைஇனிப்
படையாளை உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்
குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும்
கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு
மேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல்
முத்து மாலையுமே. 85

மால்அயன் தேட மறைதேட
வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும்
கொண்டு கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல்
விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும்
போலும் பனிமொழியே. 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத
நின்திருமூர்த்தி எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற
தால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா
விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகம்
கொண்(டு)ஆளும் பராபரையே. 87

பரம்என்(று) உனை அடைந்தேன்
தமியேனும் உன்பத்தருக்குள்
தரம்அன்(று) இவன்என்று தள்ளத்
தகாது தரியலர்தம்
புரம்அன்(று) எரியப் பொருப்புவில்
வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்ற கையான்இடப்
பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவே நின்
சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும்
நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந்து உடம்போ(டு)
உயிர்உறவு அற்(று)அறிவு
மறக்கும் பொழு(து) என் முன்னே
வரல்வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகை என் மனத்
தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக
இனி எனக்குப்
பொருந்தாத ஒருபொருள் இல்லை
விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை
நல்கும் மெல்லியலே. 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிய நுண்இடை மின்அனை
யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை
யாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி
யாரைத்தொழும் அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ வெண்பகடு
ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி நின்பாதத்திலே
மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்
டாய்;இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங் கேன் அவர்
போனவழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும்
போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல்
லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே
முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே
மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை
நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும் அடியார்விழி
நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த
மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து, மொழிதடு
மாறி முன் சொன்னஎல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால்
அபிராமி சமயம்நன்றே. 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றே வருகினும் தீதே
விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயும் இல்லை உனக்கே
பரம் எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்து
விட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இம
வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை அல்லியந்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம்
இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலா
மயில் தன்னைத்தம்மால்
ஆமளவும் தொழு வார் எழு
பாருக்கும் ஆதிபரே. 96

30 JUL 2001
PERIODICALS DIVISION

ஆதித்தன் அம்புலி அங்கி
குபேரன் அமரர்தங்கோன்
போதில் பிரமன் புராரி
முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன்
கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின் அடித்தாமரை
சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த
ஆறும் கரந்ததுஎங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால்
ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறியா
மடப் பூங்குயிலே. 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடை கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்
திடை வந்(து)உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்
கமலத்தின்மீது அன்னமாம்
கயிலாய ருக்(கு) அன்றுஇமவான்
அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந்
தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்
தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரிஅம்
பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்
எப்போதும் உதிக்கின்றவே. 100

நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்
குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

★ ★ ★

எல்லா உயிர்களிடத்திலும் உம்மை எனக்குக் காட்டி எவ்வுயிர்க்கும் என் மனத்தினாலும், வாக்கினாலும், காயத்தினாலும் எவ்விதத் தீமையும் செய்யாமல் வாழும்படியாகவும் என்னிடத்தில் அன்பு செலுத்துகின்றவர்களிடத்திலும் அன்பு செய்யாதவர்களிடத்திலும் நான் அன்பு செலுத்தி வாழும் படியாகவும், எனக்கு இவ்வுலகில் உதவுகின்ற உடம்பு, அறிவு, செல்வம், முதலியவை என்னுடையவை அல்ல என்றும் என்னிடத்தில் அடைக்களமாக மற்றவர்களுக்கு பயன்படும் படியாக ஒப்புவிக்கப்பட்டவை என்றும் நான் நம்பி வாழும்படியாகவும் அருள்புரிவீராக எனறு இறைவனை வேண்டுவாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

திருவூஞ்சல்

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம். 1.

நூல்

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 2

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங்காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகல் வானந் தூர்ப்ப
அனந்தன்முத லூரகர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கிதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 4

அன்னநடை யயிராணி கவிகை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 5

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சாற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினைய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 6

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமுமாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்துதவ மாதர் துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண்டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 8

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீர் ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 9

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில் பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா மகமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசம யமுமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீ றுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் "புதிய திருமஞ்ச" திருப்பணிக்கு பங்களிப்புச் செய்த திருவிழா உபயகாரர்க ளின் பெயர்ப்பட்டியல்

விக்கிரம வருடம் 2000ம் ஆண்டு

1.	திரு. கனகசபை நடராசா அவர்கள் குடும்பம் வட்டார இல. 5A. நயினாதீவு (சுவிஸ்)	:-	ரூ.	55 000.
2.	திரு. பொன்னம்பலம் திருச்செல்வம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 01 நயினாதீவு (கொழும்பு)	:-	ரூ.	51 000.
3.	திரு. வீரவாகு நல்லைநாதன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 01 நயினாதீவு. (கனடா)	:-	ரூ.	46 800.
4.	திரு. இராமசாமி நடராசா அவர்கள் குடும்பம் வட்டார இல. 04 நயினாதீவு. (கொழும்பு)	:-	ரூ.	30 000.
5.	திரு. கோபாலகிருஷ்ணன் கிருபாகரன் சோ.பரமேஸ்வரன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 5A நயினாதீவு. (பிரான்ஸ்)	:-	ரூ.	30 000.
6.	திரு. தம்பிமுத்து சிவானந்தன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05A நயினாதீவு. (கொழும்பு)	:-	ரூ.	25 000.
7.	திரு. அருளம்பலம் சண்முகநாதன் J.P அவர்கள் குடும்பம் வட்டார இல. 05 நயினாதீவு. (கொழும்பு)	:-	ரூ.	25 000.
8.	திரு. கனகரெத்தினம் – நாகேஸ்வரன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05A நயினாதீவு (கொழும்பு)	:-	ரூ.	25 000.
9.	திரு. கந்தையா பரமலிங்கம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 08 நயினாதீவு. (சுவிஸ்)	:-	ரூ.	25 000.
		:-	ரூ.	312 800.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்படி	:–	ரூ.	312 800
10. திரு. இராமலிங்கம் அம்பலவாணர் அவர்கள் குடும்பம் வட்டார இல. 07 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	25 000.
11. திரு. சுப்பிரமணியம் திவாகரன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 01 நயினாதீவு. (கொழும்பு)	:–	ரூ.	20 000.
12. திரு. மயில்வாகனம் மகாலிங்கம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05A நயினாதீவு. (கனடா.)	:–	ரூ.	20 000.
13. திரு. பொன்னுத்துரை கலைநாதன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 06 நயினாதீவு. (வவுனியா.)	:–	ரூ.	20 000.
14. திரு. சண்முகநாதன் பரமேஸ்வரன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 06 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	15 000.
15. திரு. சுப்பிரமணியம் ஜெயகுமார் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05 நயினாதீவு. (சுவிஸ்.)	:–	ரூ.	15 000.
16. திரு. தில்லையம்பலம் இரத்தினராசா அவர்கள் குடும்பம் வட்டார இல. 05A நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	15 000.
17. திரு. வடிவேல்ராசா அருட்செல்வம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 08 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	15 000.
18. திரு. முருகேசு இலட்சுமணன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05A நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	15 000.
19. திரு. தம்பு சண்முகரெத்தினம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	15 000.
	:–	ரூ.	487 800.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	:–	ரூ.	487. 800
முன்படி	:–	ரூ.	10 000.
20. திரு. இராமநாதர் பரமலிங்கம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05 நயினாதீவு.			
21. திரு. கந்தையா லோகநாதன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 08 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	10 000.
22. திரு. சின்னத்தம்பி குற்றாலலிங்கம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 02 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	5 000.
23. திரு. செல்லையா நாகராசா அவர்கள் குடும்பம் வட்டார இல. 07 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	5 000.
24. திரு. வேலாயுதம் நாகேஸ்வரன் அவர்கள் குடும்பம் வட்டார இல. 08 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	5 000.
25. திரு. நாகலிங்கம் சாம்பசிவம் அவர்கள் குடும்பம் வட்டார இல. 05 நயினாதீவு. (கொழும்பு.)	:–	ரூ.	5 000.
மொத்த வரவு	:–	ரூ.	527 800.
மஞ்சத் திருப்பணி நிதியாக கோவிலுக்குக் கொடுத்தது	:–	ரூ.	5 00 000.
மீதி	:–	ரூ.	27 800.
செலவு விபரம்:– யாழ் கொழும்பு பிரயாணச் செலவு	:–	ரூ.	1 2800.
வெளிநாட்டு தொலைபேசிச் செலவு	:–	ரூ.	7000.
விளம்பரச் செலவு வகையால்	:–	ரூ.	2000.
கொழும்பில் ஏற்பட்ட மேலதிக செலவு	:–	ரூ.	6000.
	:–	ரூ.	27800.

மேற்படி வரவும் செலவும் சரியானவை என்பதை இதில் உறுதி செய்கின்றோம்.

அ. சண்முகநாதன் **J.P.**
தலைவர்
ம. தி. நி. சபை
நயினாதீவு.

பொ. கலைநாதன்
செயலாளர்
ம. தி. நி. சபை
நயினாதீவு.

பொ. பரமலிங்கம்
பொருளாளர்
ம. தி. நி. சபை
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் திருமஞ்சத் திருவிழா பதிவு செய்யப்பட்ட உபயகாரர்களின் பெயர்ப்பட்டியலும் வரவு செலவு அறிக்கையும்.

2000 ம் ஆண்டு

திரு. அருளம்பலம் சண்முகநாதன். J. P.	நயினாதீவு.	ரூ.	2000.
திரு. பொன்னம்பலம் திருச்செல்வம்.	,,	ரூ.	2000.
திரு. பொன்னுத்துரை கலைநாதன்	,,	ரூ.	2000.
திரு. சண்முகநாதன் பரமேஸ்வரன்.	,,	ரூ.	2000.
திரு. பொன்னம்பலம் பரமலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. முருகேசு கந்தசாமி.	,,	ரூ.	2000.
திரு. இராமலிங்கம் அம்பலவாணர்.	,,	ரூ.	2000.
திரு. கனகரெத்தினம் நாகேஸ்வரன்.	,,	ரூ.	2000.
திரு. வேலாயுதம் நாகேஸ்வரன்.	,,	ரூ.	2000.
திரு. முருகேசு இலட்சுமணன்.	,,	ரூ.	2000.
திரு. தம்பு சண்முகரெத்தினம்.	,,	ரூ.	2000.
திரு. தில்லையம்பலம் இரத்தினராசா.	,,	ரூ.	2000.
திரு. இராமசாமி. நடராசா.	,,	ரூ.	2000.
திரு. சுப்பிரமணியம் திவாகரன்.	,,	ரூ.	2000.
திரு. முத்தையா கதிர்காமநாதன். J. P.	,,	ரூ.	2000.
திரு. சின்னத்தம்பி குற்றாலலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. செல்லையா நாகராசா.	,,	ரூ.	2000.
திரு. நாகலிங்கம் சாம்பவசிவம்.	,,	ரூ.	2000.
திரு. வடிவேலு அருட்செல்வம்.	,,	ரூ.	2000
திரு. இராமநாதர் பரமலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. நாகமணி கோபாலகிருஷ்ணன். J. P.	,,	ரூ.	2000.
திரு. கந்தையா லோகநாதன்.	,,	ரூ.	2000.
திரு. வீரவாகு நல்லைநாதன்.	,,	ரூ.	2000.
திரு. கந்தையா பரமலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. சுப்பிரமணியம் ஜெயக்குமார்.	,,	ரூ.	2000.
திரு. கனகசபை நடராசா.	,,	ரூ.	2000.
திரு. இளையதம்பி அருணாசலம்.	,,	ரூ.	2000.
திரு. சுப்பிரமணியம் இராசலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. திருமதி. சின்னத்துரை நடராசா.	,,	ரூ.	2000.
திரு. பொன்னம்பலம் குணரெத்தினம்.	,,	ரூ.	2000.
திரு. மயில்வாகனம் மகாலிங்கம்.	,,	ரூ.	2000.
திரு. பொன்னுத்துரை பத்மநாதன்.	,,	ரூ.	2000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தம்பிமுத்து சிவானந்தன்.	"	ரூ.	2000.
திரு. ச. சுபாஸ் சந்திரபோஸ்.	"	ரூ.	2000.
திரு. முருகேசபிள்ளை நகுலேஸ்வரன்.	"	ரூ.	2000.
திரு. பொன்னம்பலம் குணரெத்தினம்.	"	ரூ.	2000.
திரு. இராமலிங்கம் சண்முகலிங்கம்.	"	ரூ.	1000.
திரு. கு. அருட்குமரன்.	"	ரூ.	1000.
திரு. தி. விஜயரூபன்.	"	ரூ.	1000.
திரு. தி. சதீசன்.	"	ரூ.	1000.
திரு. சு. சுபாஸ்கரன்.	"	ரூ.	1000.
திரு. ந. பிரபாகரன்.	"	ரூ.	1000.
திரு. நா. பரமானந்தன்	"	ரூ.	1000.
திரு. க. பிரபாகரன்.	"	ரூ.	1000.
திரு. சு. சிவகுமார்.	"	ரூ.	1000.
திரு. எஸ். சிவபாலன்.	"	ரூ.	1000.
திரு. தி. பாலசுப்பிரமணியம்.	"	ரூ.	1000.
திரு. சு. சர்வேஸ்வரன்	"	ரூ.	1000.
திரு. ந. இராசகுமார்.	"	ரூ.	1000.
	மொத்தவரவு	ரூ.	85000.
2000 ம் ஆண்டு திருவிழா செலவு		ரூ.	40000.
	மீதி	ரூ.	45000.

திருவிழாவகையால் கொழும்பு கொமர்ஷல் வங்கி இருப்பு ரூ. 78577,69

அன்னையின் அருள் தொண்டில் இணைந்துள்ள அன்புள்ளங்கள்
அனைவருக்கும் அமிபிகையின் ஆசீர்வாதங்கள்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றேம்.

மஞ்சத் திருவிழா நிர்வாக சபை

மேற்படி வரவும் செலவும் சரியானவை என்பதை இதில் உறுதி செய்கின்றோம்.

அ. சண்முகநாதன் J.P.
தலைவர்

பொ. கலைநாதன்
செயலாளர்

பொ. பரமலிங்கம்
பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இடம் பெறும் மாதாந்த விஷேட நிகழ்வுகள்

தை மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ தைப்பொங்கல் விழா
★ வெள்ளி உற்சவம்
★ தை அமாவாசை உற்சவம்
★ தைப்பூச உற்சவம்
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

மாசி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ வெள்ளி உற்சவம்
★ மகாசிவராத்திரி விழா
★ மாசி மகம் உற்சவம்
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

பங்குனி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ வெள்ளி உற்சவம்
★ மிருத்துஹிஞ்ஞ ஹோமம்
★ பங்குனி ரோகினி நட்சத்திரம்
கும்பாபிஷேக தினம்
★ பங்குனி உத்தர உற்சவம்
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

சித்திரை மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ புதுவருஷப்பிறப்பு உற்சவம்
★ வெள்ளி உற்சவம்
★ சித்திரைப் பரணி
வைரவர் அபிஷேகம்
★ சித்திரைச் சதையம்
திருநாவுக்கரசர் குருபூசை
★ சித்திரா பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

வைகாசி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ வெள்ளி உற்சவம்
★ வைகாசி விசாக உற்சவம்
★ வைகாசி மூலம்
திருஞான சம்மந்தர் குருபூசை
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

ஆனி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ வெள்ளி உற்சவம்
★ மகோற்சவம் – (உயர் திருவிழா)
★ ஆனி மகம்
மாணிக்கவாசகர் குருபூசை
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

ஆடி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ ஆடிப் பிறப்பு
★ வெள்ளி உற்சவம்
★ ஆடிப்பூரவிழா
★ ஆடி அமாவாசை
★ ஆடிச் சுவாதி
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

ஆவணி மாதம்

★ சங்கிராந்தி அபிஷேகம்
★ வெள்ளி உற்சவம்
★ ஆவணி ஞாயிறு பொங்கல்
★ ஆவணிச் சதுர்த்தி
விநாயகர் சதுர்த்தி உற்சவம்
★ பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாதம்

- சங்கிராந்தி அபிஷேகம்
- வெள்ளி உற்சவம்
- நவராத்திரி விழா
- பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

ஐப்பசி மாதம்

- சங்கிராந்தி அபிஷேகம்
- வெள்ளி உற்சவம்
- கேதார கௌரி விரதம்
- தீபாவளிப் பண்டிகை
- ஸ்கந்த ஷஷ்டி விரதம்
- பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

கார்த்திகை மாதம்

- சங்கிராந்தி அபிஷேகம்
- வெள்ளி உற்சவம்
- திருக்கார்த்திகை உற்சவம்
- விநாயகர் பெருங்கதை விரதம்
- பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை
  சர்வாலய தீபம்

மார்கழி மாதம்

- சங்கிராந்தி அபிஷேகம்
- வெள்ளி உற்சவம்
- திருவெம்பாவைப் பூசை
- மார்கழித் திருவாதிரை
  ஆருத்ரா தரிசனம்
- பௌர்ணமி – ஸ்ரீசக்கர பூசை

★ ★ ★

தொண்டு

தொண்டருடைய உள்ளத்தில் இறைவன் இருக்கின்றான். ஆகவே தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது. தொண்டுக்குப் 'பணி' என்றும் பெயருண்டு. இறைவன் பணித்த வற்றைச் செய்யத் தெரிய வேண்டும். பணி செய்பவனுக்குப், பணிவு முக்கியம். பணி செய்பவன் பணிந்து போகின்றான். எல்லார்க்கும் பணிதல் நன்றாம். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் பெருமான். பணி செய்வது பெருமையல்ல. பணிசெய்து கிடப்பது தான் பெருமை. கிடப்பது என்ற சொல்லை நினைக்க, நினைக்க ஆணவத்தின் தலையில் அடி விழுந்து கொண்டே இருக்கின்றது. தொண்டனுடைய இலக்கணம் கிடப்பது என்ற சொல்லிலே தான் அடங்கியுள்ளது. "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என மணிவாசகர் வேண்டியது சிந்திக்கற்பாலது. நாரதர் ஒரு தொண்டர். கண்ணபெருமான், நீரும் ஒரு தொண்டர். என்று சொன்னபோது தான் நாரதருக்குத் தானும் ஒரு தொண்டர் என்பது தெரிய வந்தது. ஆகவே, நாமும் தொண்டு செய்யவோம். தொண்டுக்குள் நம்மை மறைத்துக் கொள்வோம். ஆண்டவன் எம்மைத் தன் அருளுக்குள் அழைத்துக் கொள்வான். தொண்டு செய். பலனை எதிர்பாராதே. ஏன்? பலன் அவனுக்குரியது. பலன் இறைவனுக்குச் சமர்ப்பணமாக வேண்டியதாகும்.

தொகுப்பு
நிறைவேற்று அலுவலர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

S. P. N. & CO.

No. 181, Keyzer Street
Colombo - 11
Telephone : 320615
Telegram : ESPEYEN

THANALUXMI TRADERS

General Merchants & Commission Agents
Dealers in all Sri Lanka Produce

T. L. T. Mills & Stores
No. 122, Negombo Road,
Peliyagoda.
T. P. 930233.

No. 181, Keyzer Stree
Colombo - 11
T. P : 330106.

WOODLANDS HOTEL

No. 192, Fourth Cross Street
Colombo - 11
Telephone : 472142, 327451.

MTCoy

MERCURY TRADING COMPANY

General Merchants & Commission Agents

No. 203, Keyzer Street
Colombo - 11
Tele : 447660, 472058.

NAINATIVU SRI NAGAPOOSHANI AMIRTHASURABHI ANNADHANA SOCIETY LTD.

`Amirthasurabhi Mandapam'

Nainativu - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

SHASTHA TRADES

No. 133, 5th Cross Street
Colombo - 11
Phone : 438991

KUMARAVEL COY.

General Merchants & Commission Agents
Dealers in Provisions

No. 217, Fifth Cross Street
Colombo - 11
Phone : 421057

OM SARAVANA CO.

General Merchants & Commission Agents

No. 229, 5th Cross Street
Colombo - 11
Sri Lanka
Tel : 433864, 435168

Ajantha Rest Inn

Ajantha Hotels Ltd.

No. 125, Olcott Mawatha
Colombo - 11. Sri Lanka
Tel: 328089, 332616,
332617, 077. 387151

(OPPOSITE TO RAILWAY STATION)

LUCKSHMI BHAWAN

Hotel, Groceries, Lodging and Communication

No. 97, Olcott Mawatha
Colombo - 11
Sri Lanka
Tel : 348261, 437252.

183622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

RUPAR TRADING (PRT) LTD

No. 116, 4th, Cross Street
Colombo - 11
T. Phone : 326719, 447329.
T'grams : RUPATRAD.

V. MANICKAM & BROTHER

Importers, General Merchants & Commission Agents
No. 34, 4th Cross Street
Colombo - 11
Tel : 323408, 323986, 432347
Fax : 421972
Telegrams : THAVAYOGA.

M / s. SIVASHANMUGARAJAH & Co.

General Merchants & Commission Agents Cooperative Suppliers

No.45, 4th Cross Street
Colombo - 11
Phone : 436077, 338114

SHANMUGA AGENCY

General Merchants & Commission Agents

No. 45, 4th Cross Street
Colombo - 11
Tel : 421943, 438467

AMIEKO ENTERPRISE

General Merchants & Commission Agents

No.31, Fourth Cross Street
Colombo - 11
TelePhone : 430772, 347306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

PRASATH ENTERPRISE
&
K. R. N. ENTERPRISE

No.75, 5th Cross Street,
Colombo - 11
Tel: 327884

S. K. N. AGENCIES

Dealers in all Kinds of Local Produce & Commission Agents

No.220, Prince Street,
Colombo - 11
Tel : 422465, 330630.

NEW VISHNU TRADING CO.

General Merchants & Commission Agents
For Local Produce

No.174, 4th Cross Street
Colombo - 11
Phone : 324364, 434874.

SHREEVISNU ASSOCIATES

No : 142 - 144, 4th Cross Street
Colombo - 11
Tel : 449924

SHARP AGENCY

Commission Agent & General Merchants
Dealers in Exports & Imported Food Items

No.189 A. Keyzer Street
Colombo - 11
Tel : 323711, 077 - 381659

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

RAMSETHU & CO.

Importers, General Merchants & Commission Agents

No.65, 4th Cross Street
Colombo - 11 Sri Lanka
Tel : 323686, 380374, 077 - 344272.

MALAVANS

No. 214, Fourth Cross Street
Colombo - 11
Sri Lanka
Tel : 323668, 327951

SRI RANGAN TRADING COMPANY

General Merchants & Commission Agents for Local Produce

No. 200, 202, 4th Cross Street
Colombo - 11
Sri Lanka
Phone : 325464, 441401

CHILLIE TRADING CO.

P-250, Keyzer Street
Colombo - 11
Tel : 434088

Importers & Exporters, General Merchants & Commission Agents

NEW CHILLIES ENTERPRISES

No. 28/ C, Keyzer Street
Colombo - 11
Tel : 439616

Luxury Trading Company

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

No. 178, 4th Cross Street
Colombo - 11
T. Phone : 422971, 470858

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICALS SECTION

With Best Compliments From

KANTHE STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

No. 112, 114, 4th Cross Street
Colombo - 11
Phone : 435712, 458769

EVEREST COMPANY

General Merchants & Commission Agents

No. 53-1/1, Fourth Cross Street
Colombo - 11
Phone : 439196, 075-334859

DAVI TRADING COMPANY

Importers & Exporters

No. 60, 4th Cross Street
Colombo - 11. Sri Lanka
T. Phone : 422034
Fax No. : 432444

U. S. A. TRADING COMPANY

General Merchants & Commission Agents

No. 68, 4th Cross Street
Colombo - 11
T. Phone : 422250, 348656
T'gramas : U. S. A.

THIVAGAN COMPANY

General Merchants & Commission Agents For Local Produces

No. 208, 4th Cross Street
Colombo - 11
Phone : 328556

University of Jaffna
183622
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

மஞ்சத்திருவிழா நிர்வாக சபை

போஷகர் வே. நாகேஸ்வரன், தலைவர் அ. சண்முநாதன் J. P உபதலைவர் பொ. திருச்செல்வம், செயலாளர் பொ. கலைநாதன் உப செயலாளர் மு. இலட்சுமணன் பொருளாளர் பொ. பரமலிங்கம் உப பொருளாளர் சி. க. நாகேஸ்வரன்.

ஸ்தபதியார் சி. அமரசிங்கம் அவர்களுடன் மஞ்சத்திருவிழா நிர்வாகசபைத் தலைவரும் அறங்காவலர் சபை உறுப்பினர் மூவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Graphics Desingned & Printed by Unie Arts (Pvt) Ltd. Tel: 330195